# கள்ளும் கவிதையும்

கு. ஆறுமுகம் பிள்ளை,
ஓய்வு பெற்ற ... ர்
... திருநகர்
மதுரை-காமராசர் பல்கலைக் கழகத்
தமிழ்த் துறைக்கு அன்பளிப்பு

அ. சுருளியாண்டிப் பாவலர்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

முருக நிலையம்,
கோம்பை.
(மதுரை மாவட்டம்)
1956.

முதற் பதிப்பு: 1956.

உரிமை ஆசிரியர்க்கே.

விலை ரூபாய் ஒன்று.

சரித்திரத்தில் உள்ளதைக் காட்டிலும்
கவிதையில் அதிக உண்மை உளது,

— ஓர் கிரேக்க அறிஞர்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.சு. சண்முகம் நூலகம்,
தமிழியல் துறை

பங்கஜம் பிரஸ். போடிநாயக்கனூர்.

# கள்ளும் கவிதையும்.

## முன்னுரை.

அன்பார்ந்த தமிழ்ப் பெரியீர்;

சுதேசமித்திரன், கல்கி, ஹிந்துஸ்தான், மாதர் நல இலாகா சௌபாக்கியம், அமுத சுரபி, மேழிச் செல்வம் (சென்னை), தமிழ்நாடு வாரப்பதிப்பு (மதுரை), கிராம ராஜ்யம் (T. கல்லுப்பட்டி), முத்தமிழ்ச்சோலை (பொள்ளாச்சி), திருக்குறள் ஆட்சி (இராசீபுரம்), இலக்கியம் (விருதுநகர்), தமிழ்ச் சுடர் (பெரியகுளம்), சங்கொலி (திருக்கழுக்குன்றம்) ஆகிய பத்திரிகைகளில் ஏற்கனவே வெளிவந்த எனது கவிதைகளின் தொகுப்பேயாகும் இந்நூல். இதன் முதற் கவிதையான **"கள்ளும் கவிதையும்"** என்பதையே நூலின் பெயராக வைத்துள்ளேன்.

இந்நூலில் கண்ட கவிதைகளை வெளியிட்டுக் கொள்ளும் உரிமையை அன்புடன் அனுமதித்த மேற்கண்ட பத்திரிகாசிரியர்கட்கும், அச்சிடுதற்குப் பொருளுதவிய கனவான்கட்கும் என் உளங்கனிந்த நன்றி.

எனது குறுந்தொகை விருந்தையும், பிற நூற்களையும் போன்று இதனையும் ஆதரித்து என்னை மேலும் ஊக்குமாறு தமிழன்பர்களையும் பெரியோர்களையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்!

தங்களன்புள்ள,

முருக நிலையம்,
கோம்பை.
(மதுரை மாவட்டம்)
16—1—57

**அ. சுருளியாண்டிப்பாவலர்.**

நாவலர், கணக்காயர், முது பெரும் புலவர்,

டாக்டர், ச. **சோமசுந்தர பாரதியார்**, M. A., B. L., D. Litt., அவர்களின் சிறப்புரை.

---

மலையகம்,
பசுமலை
11–8–56.

கோம்பை, திரு. சுருளியாண்டிப் பாவலர் பாடியுள்ள **"கள்ளும் கவிதையும்"** என்ற பெயருடன் திரட்டிய தனிப்பாடற்றிரட்டில் பல பாடல்களைப் படிக்கக் கேட்டுச் சுவைத்தேன். எளிமையோடினிமை விரவிய இயல் வளமிக்கு மிளிர்கின்றன. இயற்கை வனப்பும், மக்கள் உள்ள உணர்ச்சி வளமும் ஒருங்கே அமைந்துள்ளன. இளைஞரும், முதியரும் ஒருங்கே மகிழ்தற்குரியன. இன்னும் பல்லாண்டு புகழும், புலமைதரும் பெருமையும், செல்வமும் பெருக இவர் வாழ்ந்திடுக; கவி பல பாடிடுக!

ச. சோ. பாரதி.

# அணிந்துரை.

கலைகளிற் சிறந்த கவிதைக் கலைக்குத் தொண்டாற்ற வேண்டுமென்னும் பெரு விருப்பால், பாவலர் அவர்கள் தரும் **"கள்ளும் கவிதையும்"** என்னும் கவிதைத் தொகுப்பு கற்றுக் களித்தற்குரியது.

"என்றும் இனிப்பதுடன்-கற்றோர்
இதயத் தாமரையில்
நின்றே நீளின்பம்-உதவும்
நீர்மையதே கவிதை" - என

கவிதைக்கு இலக்கணம் வகுத்துக்காட்டும் பான்மை பாராட்டுதற்குரியது.

தேனுடனே முப்பழமும் பாலமுதும் தினமுண்டு
திளைக்கும் செல்வர்
சிங்காரம் பற்றியொரு சிறுகவியும் எழுதிடநீர்
சிந்திக்காதீர்!

.............................................................................

வானமதே கூரையென மண்தரையேமெத்தையென
வதியும் மக்கள்!

பற்றிக் கவி எழுதுவோம், எழுவீர் இன்றே! என்னும் அழைப்பு, கவிஞர்களுக்கு விழிப்பூட்டும் நிலையில் அமைந்துள்ளது. "கவி எழுதுவோம்" எனும் இக்கவிதை முழுதும் கருத்துச் செறிவுடன் மிளிர்கிறது.

கோழைத்தனமும் குறுகிய நோக்கமும்
குருவி யிடத்திலுண்டோ?
ஏழைத்தனத்தினால் ஏன் உழல்கின்றனை?
எண்ணமில்லா மனிதா! - என

வினக் குறியும், வியப்புக் குறியும் எழுப்பி "எட்டுத் திசையும் பறந்து திரியுமச் சிட்டுக் குருவியைப் பார்" எனத் தொடங்கும் கவிதையைப் பார்க்கத்தான் வேண்டும்; படிக்கத்தான் வேண்டும்.

"அமிழ்தெனும் தமிழ்மொழி ஆய்ந்தவர்
அயல் மொழி பயில்வது தீங்கல" – எனும்

அடிகளில் "ஆய்ந்தவர்" என்பது "வெல்லுஞ்சொல்" ஆகும். எண்ணிப் பார்த்தற்குரிய சொல் அது.

சிந்திய ரத்தம் சிறிதளவா?
செத்தவ ரின்தொகை எத்தனையோ?

என்ன அழகோடு மிளிர்கின்றன, இவ்வடிகள். மற்றும், தமிழ் முனிவன், திரு. வி. க. வைப் பாராட்டி, "ஆடியைப்போன்ற மனமுடையான்" என்னும் உவமை உயர்ந்தது. நிற்க,

"பாரதி நினைவு", தமிழன் வேட்கை", "தமிழன் பணி", "எண்ணிப் பாருங்கள்", "சொர்க்கபூமி" முதலிய கவிதைகள், சொல்லழகும், பொருள் அழகும், நடையழகும், தொடையழகும் வாய்ந்து மிளிர் கின்றன.

இன்னும் எத்தனையோ வாடாத வண்ண மலர்கள்! நுகர்ந்து இன்புறுங்கள்!

**அ. சற்குணபாண்டியன்.**
தலைமைத் தமிழாசிரியர்,
மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளி.

தேவாரம்,
5—7—1956

# கள்ளும் கவிதையும்.

## பா நிரல்.

1 கள்ளும் கவிதையும்
2 மலரின் வாழ்வு
3 காட்டுக்கிளியும் கூட்டுக்கிளியும்
4 பயன் உண்டோ?
5 வாழ்க்கை
6 கன்னியும் கடலும்
7 கவிதை
8 சிட்டுக்குருவி
9 குயில்
10 காக்கை
11 வானம்பாடி
12 பாரதி நினைவு
13 எங்கள் மாகவி
14 கவியின் கனவு
15 பாரதியின் மாண்பு
16 எங்கள் நாடு
17 கவி எழுதுவோம்!
18 தமிழன் வேட்கை!
19 தமிழன் பிரார்த்தனை
20 பாடு தமிழா!
21 தமிழன் பணி
22 அருந்தமிழும் ஆங்கிலமும்
23 தமிழ் வாழ்வு பூத்திடுக!
24 தமிழ்ப் புத்தாண்டு
25 செந்தமிழ் நாடு

26 செந்தமிழ் வாழியவே!
27 குறளின் பெருமை
28 எங்கள் தமிழ் மொழி
29 வீரத் தமிழ் மகனே!
30 இணையிலாத் தமிழன்
31 உழவன் உறுதி!
32 உழவன் உள்ளம்!
33 உழவன் உயர்வு!
34 உழவன் பொங்கல்!
35 மருத மள்ளர் வாழ்வு!
36 அன்புச் சுடர்!
37 ஆசிய சோதி
38 மகாத்மா மதுரை வருகை
39 காந்தி பிறந்தான்!
40 இரத்தக் கண்ணீர்!
41 இரும்பு மனிதன் எங்கே?
42 மறைந்ததோ? அரவிந்த மலர்!
43 தமிழ் முனிவன் மறைவு!
44 கம்பமணி மறைவு!
45 தென் முனிவன் எங்கேயோ?
46 தியாகிகள் நினைவு
47 வாழ்க ராஜாஜி!
48 நிகரிலா நேரு!
49 நீடூழி வாழ்க நேரு!
50 மாலையின் வருகை
51 தீபாவளித் திருநாள்!
52 பாமையின் வீரம்!
53 இலவச வைத்தியர்!
54 மனிதன் நிலை!
55 எண்ணிப் பாருங்கள்!
56 அவன் யார்?

57 சொர்க்க பூமி!
58 இழந்ததை எய்தினோம்!
59 ஜெய் ஹிந்த்!
60 ஊர் அரசு
61 இதமுறல் என்றோ?
62 இதுவா விடுதலை?
63 முரண்பட்ட காட்சி!
64 நேதாஜி நாமம் நிலவுக!
65 பொங்கலும் வந்ததடி!
66 எங்கும் இன்பம்
67 பாக்கியவான்கள் யார்?
68 இன்பக் குறள்
69 பிரார்த்தனை
70 இறைவன் தொடர்பு
71 காலமும் கடவுளும்
72 முத்தாரம்.

---

...ராசப் பல்கலைக்கழக...
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

## 1. கள்ளும் கவிதையும்.

### 1

கள்ளு போதைப் பொருளே - கண்டுக்
கவிதை போதைப் பொருளே!
நல்ல போதை நல்கும் - பொருளை
நாட வேண்டும் நாமே!

### 2

கவலை வந்த போது - கருப்பன்
கள்ளுக் கடைக்குப் போவான்!
திவலை யேனும் கவலை - அவனுக்குத்
தீர்ந்த பாட்டைக் காணோம்!

### 3

கருப்பன் கவலை தன்னை - நாற்றக்
கள்ளு போக்கி விடுமோ?
விருப்ப மாகக் குடித்தான் - கண்டோர்
சிரிப்பதற் கிடமாக!

### 4

கவலை வந்த போது - அறிஞன்
கவிதைக் கடைக்குப் போவான்!
கவிதைக் கள்ளை யள்ளி - உண்டு
களித்திருந்து வாழ்வான்!

### 5

கள்ளின் போதையாலே - கருப்பன்
கருத்தழிந்து கெட்டான்!
கவிதைப் போதையாலே - அறிஞன்
கடவுளின்பங் கண்டான்!

## 2. மலரின் வாழ்வு!

1

மலரே! மலரே! மணமலரே
மகிழ்ந்தே சிரிக்கும் மாண் மலரே!
பலரும் விரும்பும் பனிமலரே!
பாரில் உன்போல் வாழ்வோர் யாரோ?

2

மன்னர்கள் மார்பில் வாழ்வாய் நீ!
வானவர் பூசைக்(கு) ஆவாய் நீ!
கன்னியர் கூந்தல் கவினும் நீ
கரும்பு வில் காமன் கணையும் நீ

3

காலையில் இனிதே மலர்வாய் நீ!
கண்கவர் வனப்பைத் தருவாய் நீ
மாலையில் மகிழ்வாய் மடிவாய் நீ!
மடிவதை எண்ணி வாடாய் நீ!

4

உந்தன் வாழ்க்கை ஒரு நாளே!
எனினும் இன்பாய் உள்ளாய் நீ!
எந்தன் வாழ்வில் இன்பில்லை!
ஏனோ பிறந்தேன் இகமீதே!

5

என்போல் எண்ண இயலாத
இன்னல் எதுவும் உனக்கில்லை!
உன்போல் உலகில் உயிர் வாழ
விழைந்தேன் மர்மம் உரையாயோ?

---

## 3. காட்டுக்கிளியும் கூட்டுக்கிளியும்.

காட்டுக்கிளி: கூட்டுச் சிறையில் அடைபட்டாய்!
கொவ்வைச் செவ்வாய்ப் பைங்கிளியே!
காட்டை நோக்கிப் பறந்துபோய்க்
களிப்பாயங்கே இருப்போம் வா!

கூட்டுக்கிளி: காட்டுக்கேனோ செலவேண்டும்?
கனி, காய் தேடி அலைவதற்கா?
கூட்டில் சுகமாய் இருப்போம் வா!
கோட்டுக் கனியும் இங்குண்டு!

காட்டுக்கிளி: வானில் பறந்து மகிழ்ச்சியுறும்
நானிக் கூட்டில் நலிவேனோ?
ஏனிப்பேதை மதியுனக்கு?
என்னை உன்னோ(டு) அழைக்காதே!

கூட்டுக்கிளி: அந்தோ! வான வெளிதனிலே
அலைய என்றால் ஆகாதே!
சிந்தைக் கினிய இடமிதுவே
செல்லேன் எங்கும் இனி நானே!

காட்டுக்கிளி: அடிமை வாழ்வில் ஆழ்ந்தவர்கள்
அறியார் சுதந்திர மாண்பினையே!
படிமேல் உன்போல் பலருண்டு!
பழக்கம் என்னும் வலைப்பட்டார்!

---

## 4. பயன் உண்டோ?

மனிதன்: புல்லே! சொல்லாய்! உன்னாலே
பூவுலகோர்க்குப் பயனுண்டோ?

புல்: நல்லாவுக்கும் ஆட்டுக்கும்
நான் உணவாவேன் அறியாயோ?

மனிதன்; நெல்லே! சொல்லாய்! உன்னாலே
நீணிலத்தார்க்குப் பயனுண்டோ?

நெல்: பல்லார் உணவும் நானன்றோ?
பாரில் இதை நீ அறியாயோ?

மனிதன்; எள்ளே! சொல்லாய்! உன்னாலே
இவ்வுல கோர்க்குப் பயனுண்டோ?

எள்; எண்ணெய் தருவது நானன்றோ?
ஏனோ இதனை நீ மறந்தாய்!

மனிதன்; கொள்ளே! சொல்லாய்! உன்னாலே
குவலயத்தார்க்குப் பயனுண்டோ?

கொள்: குதிரையும் மனிதரும் உணவாகக்
கொள்ளுவ ரென்னை அறியாயோ?

மனிதன்; கல்லே! சொல்லாய்! உன்னாலே
காசினியோர்க்குப் பயனுண்டோ?

கல்: கடவுள் உருவாய்க் கட்டிடமாய்க்
காட்சி தருவேன் காணாயோ?

புல் முதலிய அனைத்தும் ஒன்றுசேர்ந்து: பொல்லா மனிதா! உன்னாலே
புவிக்கென் பயனோ? சொல்லாய் நீ!

---

## 5. வாழ்க்கை.

இன்பும் துன்பும் இணைந்தது வாழ்க்கை!
மேடும் பள்ளமும் மேவிய வாழ்க்கை!
வெற்றியும் தோல்வியும் உற்றிடும் வாழ்க்கை!
புயலும் அமைதியும் பொங்கிய வாழ்க்கை!
வறுமையும் செல்வமும் வாய்ந்தது வாழ்க்கை!

இன்பைக் கண்டு இறுமாப் பேனோ?
துன்பைக் கண்டு சோர்வுறல் ஏனோ?
மேடும் பள்ளமும் விரைவினில் மாறும்!
தோல்வியின் முடிவில் வெற்றி தோன்றும்!
புயலின் இறுதியில் பொங்கும் அமைதி!
வறுமையிற் செம்மை வாழ்க்கையின் பெருமை!
செல்வம் கண்டு செருக்குறல் தீது!
வாழ்க்கையில் வருவதை மகிழ்வா யேற்றுத்
தாமரை யிலைமேல் தண்ணீர் போன்று
பற்றில்லாமல் பணி பல செய்து
அனைத்துயி ரிடத்தும் அன்பைச் செலுத்தி
என்றும் இன்பாய் இகமேல்
வாய்மையின் வடிவாய் வாழ்வதே வாழ்க்கை!

---

## 6. கன்னியும் கடலும்.

அன்றொரு நாளென் அன்பைக் கவர்ந்து
என்றும் உன்னைப் பிரியேன் என்று
காதலர் கூறினர்; பேதை யான் நம்பினேன்!
பிரிந்தவர் சென்றார்; வருந்தினம் என்றோ?
அந்தோ, யானோ, ஆருயிரன்பன்
தன்னைப் பிரிந்து தணியாத் துயரால்
அல்லும் பகலும் உள்ளம் நொந்து
உண்டியுந் துயிலும் ஒருங்கே துறந்து
எல்லாம் இழந்து இங்கே தனியாய்க்
கண் துயிலாது கலங்குகின்றேனே!
பிரிவால் நேர்ந்த துயரம் பெரிதே!

கரையில் மோதிக் கண்ணீர் சிந்தி
இரவெல்லாம் நீ ஏதோ கூறிப்
புலம்புகின்றாயே, அலம்புங் கடலே!
என்போலுந்தன் இதயம் வருத்திய
காதலன் யாரோ? ஓதாய் நீயே!

---

# 7. கவிதை.

1

என்றும் இனிப்பதுடன் – கற்ளூர்
இதயத் தாமரையில்
நின்றே நீளின்பம் - உதவும்
நீர்மையதே கவிதை!

2

ஆயும் பொழுதெல்லாம் - இனிமை
அளிப்பதுவே கவிதை!
தேயும் மனத்திலுள்ள - குறையைத்
தீர்ப்பதுவே கவிதை!

3

மானிடர் மனத் துயரை - அறவே
மறக்க வைப்பது கவிதை!
தேனினும் தீஞ்சுவைத்தாய் – இலகும்
சீர்த்தியதே கவிதை!

4

உலகத்துப் பொருள்களிலே - நிரம்பி
யுள்ள குறைகளெல்லாம்
அழகுறச் செப்பனிட்டே – உதவும்
ஆற்ற லுள்ளது கவிதை!

5

சொல், பொருள் நயமுளதாய் – மிகவும்
தூய்மை நிறைந்ததுவாய்
பல் சுவை மிக்கதுவாய் – மிளிரும்
பான்மையதே கவிதை!

6

இறவாப் பெருவாழ்வை – இகமேல்
ஈவதுவே கவிதை!
மறவா தெந்நாளும் – மனத்தில்
வாழுவதே கவிதை!

7

உள்ளம் கொள்ளை கொள்ளும் – உரையும்
உவமையும் உள்ளனவாய்
வெள்ளம் விரைவது போல் – விரும்பி
விள்ளுவதே கவிதை!

8

அறம், பொருள், இன்பமதை – உலகில்
அளிப்பதுவே கவிதை!
பரம் பொருட் படைப்பிலுள – பண்பைப்
படம் பிடிப்பது கவிதை!

---

## 8. சிட்டுக்குருவி.

1

எட்டுத் திசையும் பறந்து திரியுமச்
சிட்டுக் குருவியைப் பார்!
விட்டு விடுதலை பெற்று மகிழ்ந்தது
கட்டுகள் நீங்கின தேர்!

2

வான வெளிதனில் வட்டமிட்டுச் சுற்றி
வந்து மகிழ்ந்திடுமே!
ஈனக் கவலைகள் இன்றித் தினந் தினம்
இன்புற்றிருந்திடுமே!

3

சோற்றுத் துயரமும் துன்பச் சுமைகளும்
சூழ்வதில்லை யதையே!
வேற்று நினைவுகள் விட்டுச் சுதந்திர
மேன்மை படைத்ததுவே!

4

கோழைத் தனமும் குறுகிய நோக்கமும்
குருவியிடத்தி லுண்டோ?
ஏழைத் தனத்தினால் ஏன் உழல்கின்றனை
எண்ணமில்லா மனிதா!

5

செட்டை யடித்துப் பறந்து திரியுமச்
சிட்டுக் குருவியைப் போல்
கட்டுக ளத்தனையும் பொடியாக்கிக்
கணத்தினில் மீட்சியுறுய்!

---

## 9. குயில்.

1

குயிலே! குயிலே! கருங்குயிலே!
கூவும் இனிய குரற்குயிலே!
பயிலா திருந்தும் குரலினிமை
பாங்காய்ப் பெற்றுய், பண் குயிலே!

2

தென்னை மரத்தின் சிறு கிளையில்
தன்னந் தனியே நீ யிருந்து
வன்னக் கவிதை பாடுவதை
மகிழ்வாய்க் கேட்டேன், மாண் குயிலே!

3

கன்னல் உன் குரற் கீடாமோ?
கன்னங் கரிய சிறு குயிலே!
இன்னும் கொஞ்சம் கூவாயோ?
இதயங் கவர்ந்த எழிற் குயிலே!

4

எண்ணம், கவலை இல்லாமல்
இனிதே கூவும் இளங்குயிலே!
உன்போல் மகிழ்வாய் நான் கூவ
விழைந்தேன் மர்மம் உரையாயோ?

---

## 10. காக்கை.

1

காக்கை நல்ல காக்கை — மிகவும்
கன்னங் கரிய காக்கை!
நோக்க மறியுங் காக்கை — இதனை
நோக்க நோக்க இன்பம்!

2

சிறுவர்கள் கை வடையைத் — திறமாய்த்
திருடித் தின்னும் காக்கை!
அரிய குணங்கள் பல — இதனிடம்
அமைந்ததை நீ யறியாய்!

3

வைகறைத் துயில் விழிக்கும் — நல்ல
வழக்க முடைய காக்கை!
மெய் குளித் தில்லம் புகும் — அரிய
விதி யறிந்திடும் காக்கை!

காமராசர் பல்கலைக்க
அவ்வை

4

உற்ருருட னுண்ணும் – இனத்தோ(டு)
உறவும் கொள எண்ணும்!
கற்ருயோ? மனிதா – நீ தான்
காக்கையின் நற்குணமே!

5

மற்றவர் காணுமல் – பெண்ணை
மருவிடும் மதி நலமே
பெற்றது சிறு காக்கை – மனிதனைப்
பேசவுங் கூசுதடா!

6

நிறத்தில் கரிய தேனும் - காக்கை
தரத்தில் பெரியதாமே!
கருத்தி லிதனைக் கொள்வாய் – மனிதா!
காக்கையுன் குருவாமே!

---

## 11. வானம்பாடி.

மாலை நேரம்; சோலையினேரம்
வானம்பாடியின் கானங் கேட்டது!
தேனினுமினிய செந்தமிழ் மொழியில்
மானிடக் குரலில் மன மகிழ்வாகப்
பைரவி ராகந் தன்னிற் பாடிய
பண்ணெலி கேட்டுத் தன்னுளம் பூத்த
வாலிப னெருவன் மயங்கி நின்ருன்!

இத்தனை இனிமை ததும்ப இசைத்த
புள்ளைக் காண உள்ளம் விரும்பிப்
பொழிலுட் புகுந்தான்; பூங்கிளை தோறும்
உற்று நோக்கினன்; ஒன்றுங் காணுன்!
பறவையங்கில்லை! பாட்டும் நின்றது!

ஓங்கிய வியப்புடன் ஓரிடத்தமர்ந்தான்!
அவன் பின் புறத்தில் யாரோ நகைக்கும்

இள நகை கேட்டது; எழுந்தான் விரைவாய்
திரும்பிப் பார்த்தான்; தேடிய பொருளின்
ஒப்பிலா உருவம் உவப்பாய் நின்று
''வானம்பாடி'' நானிங்கிருக்க
''எவரைத் தேடினீர்'' என்னக் கேட்டது!
மவுனமாய் நின்றான்; வலிந்தவ் வடிவம்
அவனைத் தழுவி யணைந்தது காணீர்!

---

## 12. பாரதி நினைவு.

1

கூட்டுக் கிளி யென வாழ்ந்த — பல
கோடி மனிதரைச் சூழ்ந்த
கேட்டை யகற்றிடத் தேர்ந்த — உயர்
கீதை யெனும் புகழார்ந்த
பாட்டுக்கள் பாடிய புலவன் — நம்
பாரதி யென்பது மிகையோ?
நாட்டுக் குழைத்தலை விழைந்த — கவி
நம் முளக் கோயிலில் வாழ்க!

2

அச்ச மெனுங் களை யறுத்தான் - அன்னை
அடிமை விலங்கினை முறித்தான்!
முச்சகமும் எதிர்த்தாலும் — அவர்
முன்னின்று மார்தட்டுந் திறத்தான்
உச்சியில் வான் விழுந்தாலும் — இனி
அச்சமில்லை யென உரைத்தான்!
பச்சைக் குழந்தையும் படிக்கும் - சுவைப்
பாடல்கள் பற்பல தொகுத்தான்!

3

இத்தல முள்ளது வரைக்கும் — இங்கு
இரவி, மதியுள வரைக்கும்
தித்திக்கும் செந்தமிழ் மொழியின் — தனிச்
சீர்த்தி நிலைத்திடும் வரைக்கும்
சித்தர்களுக்குள்ளே சிறந்த — பெரும்
சித்த னெனும் சீர்க் கவியாம்!
உத்தம பாரதி புகழும் — நனி
ஓங்கித் தழைக்கு மென்றுணர்க!

---

## 13. எங்கள் மாகவி!

1

வாழிய செந்தமிழ் மொழியென வாழ்த்திய
மாகவி எம்முடைப் பாரதியே!
ஏழுலகும் புகழ் இலகத் தமிழ்க் கவி
யாத்த புலவ னெங்கள் பாரதியே!

2

உண்மைத் தமிழ்ப் பயி ரோங்கிடவே உரம்
ஊட்டிய கவி யெங்கள் பாரதியே
வண்மையும் திண்மையும் வளர்ந்திடவே கவி
மழை பொழிந்தவ னெங்கள் பாரதியே!

3

ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோ மென
அன்றுரைத்தோ னெங்கள் பாரதியே!
நானென்ற ஆணவம் நீக்கிய ஞானிபோல்
நானிலம் வாழ்ந்தவன் பாரதியே!

4

வண்ணமிகும் கண்ணன் பாட்டை மகிழ்வுடன்
வழங்கியவன் எங்கள் பாரதியே!
எண்ணரும் சுவையுடன் எழில் மிகுங் கவிதைகள்
இயம்பிய கவி எங்கள் பாரதியே!

---

## 14. கவியின் கனவு.

### பல்லவி

வானம்பாடி போல் கானம் பாடிஞய்!
மறவோமே! சுப்ர மண்ய பாரதி!

### அநுபல்லவி

ஈனமாம் அடிமைத் தனத்தில் இளைத்த
இந்திய மக்களைச் சிந்தையில் நினைத்தே (வானம்)

### சரணங்கள்

தேனெனும் தமிழால் தேசீயப் பனுவல்
செப்பியே சிறந்தாய், ஒப்பிலாமணீ!

வானுலகிலே வண்ணம் சிந்து பாட
மகிழ்ந்தேகிஞயோ? வாராயோ? நீயே (வானம்)

கவியே நீ கண்ட கனவு நனவாய்க்
கை கூடிற்றின்றே களித்தோம் நன்றே!

புவியோர்களெல்லாம் புகழ்ஞானி நீயே!
பொன்னுலகம் போஞய் என்னிலும் மறவோம் (வா)

---

## 15. பாரதியின் மாண்பு.

1

நாட்டு நலங் கருதியவன் நல்லகுணக் குன்றனையான்
நளினம் மேவும்
பாட்டினிலும் உரையினிலும் பாரதத்தின் தொன்மையினைப்
பகரும் நாவான்!
காட்டிலுள பறவைகளும் விலங்குகளும் மயங்கிடுமிக்
கவியின் பாட்டைக்
கேட்டு மனம் உருகாத தமிழரையும் தமிழரெனக்
கிளத்தற் பாற்றோ?

2

பண்பட்ட பாரதியின் பைந்தமிழாம் பனுவல்களைப்
பாடக் கேட்டால்
கண்பட்ட மானிடரும் விழிபெற்றுச் சுதந்திரத்தைக்
காண்போ மென்பார்!
புண்பட்ட நெஞ்சங்கள் மகிழ்வெய்தும்; எட்டையா
புரத்தி லுள்ள
மண்பட்டால் ஆயிரமா மறுமலர்ச்சிக் கவிஞர் பலர்
மலர்வா ரன்றோ?

---

## 16. எங்கள் நாடு.

1

இமயமெனும் உயர்மலையின் எழில்மிகுந்த நாடு!
இது போல உலகமதில் இல்லைவேறு நாடு!
குமரிதனைத் தென்முனையிற் கொண்ட தெங்கள் நாடு!
குவலயத்தின் பொருளனைத்தும் குவிந்திருக்கும் நாடு

2

பஞ்சநதி பாயுமெங்கள் பாரதத்தாய் நாடு!
பல்வளமும் பெற்றுயர்ந்த பாவனநன் னுடு!
தஞ்சமென வந்தவர்க்குத் தந்துதவும் நாடு!
தாரணியில் வேறு இணை தானிலாத நாடு!

3

கம்பனெனும் உயர்கவியைக் கண்டதெங்கள் நாடு!
காளிதாசன் வள்ளுவனுர் கவி மணக்கும் நாடு!
கும்பமுனி தந்ததமிழ் குலவுதிரு நாடு!
குலமகளிர் கற்புநிலை கோணிடாத நாடு!

4

மாமுனிவர் காந்திமகான் வாழ்ந்ததெங்கள் நாடு!
மற்றும்பல மேலோர்கள் வளர்ந்திடு சீர்நாடு!
பூமிதனில் இதற்கிணையாய் இல்லைவேறு நாடு!
போற்றுவம்நம் தாய் நாட்டை மிகவுமன்பி னுேடு!

---

## 17 கவி எழுதுவோம்!

1

பட்டுடுத்தி அலங்கரித்துப் பட்டணத்தின் வீதியெல்லாம்
பார்க்கச் செல்லும்
கட்டழகு மிக்கபல காரிகையார் பற்றியொரு
கவியும் வேண்டாம்!
கட்டுதற்குத் துணியின்றி மாந்தர்பலர் கண்கலங்கும்
காட்சி தன்னை
மட்டற்ற கவிதைகளாய் வரைந்திடுவோம் புலவர்களே
வாரீர் இன்றே!

## 2

தேனுடனே முப்பழமும் பாலமுதும் தினமுண்டு
திளைக்கும் செல்வர்
சிங்காரம் பற்றியொரு சிறுகவியும் எழுதிட நீர்
சிந்திக் காதீர்!
மானமதை விற்றேனும் சோறுண்ண வாசலிலே
வந்தே நிற்கும்
மாதர்களைச் சீர்திருத்த வரைந்திடுவோம் கவி, புலவீர்
வாரீர் இன்றே!

## 3

வானமதே கூரையென மண்தரையே மெத்தையென
வதியும் மக்கள்!
மாடுகளுக் கொப்பாக வண்டிகளைத் தாமிழுத்து
வதங்கும் மக்கள்!
கானமதில் விறகெடுத்துக் காசாக்கிக் கூழுண்டு
கலங்கும் மக்கள்!
ஈன நிலை யாவையுமே எழுதிடுவோம், புலவர்களே
எழுவீர் இன்றே!

## 4

பாழ் நிலத்தைச் சீர்திருத்தி உழுது பயிர் செய்தவனும்
பலனைக் காணுன்!
நாள் முழுதும் நனியுழைத்த தொழிலாளி பசிப்பிணியால்
நைந்தே நின்றுன்!
வாழ்வதற்கும் வழியின்றி மடிவதற்கும் துணிவின்றி
மண்ணின் மீதே
மயங்குமிவர் துயரெல்லாம் வரைந்திடுவோம், புலவர்களே
வாரீர், இன்றே!

---

# 18. தமிழன் வேட்கை.

1

முன்னேனோ தமிழ்மொழியை உலகத்தின் மொழிகளிலே
முதன்மையாக்க
மன்னேனோ மொழிவலியால் வாழேனோ தமிழ்ப்பயிரை
வளர்த்திடேனோ?
உன்னேனோ தமிழுயர்வை உலகத்தார்க் கிதன்பெருமை
உரைத்திடேனோ?
என்னே! நான் தமிழ்மகனய் இகமதனிற் பிறந்தபயன்
இஃதல் லாதே!

2

நாடேனோ நற்றமிழை நாடோறும் நான்மகிழ்ந்து
நாடி நாடிப்
பாடேனோ யாழிசைத்துப் பண்ணுடனே பைந்தமிழைப்
பாடிப் பாடி
ஆடேனோ அகமகிழ்வாய் அபிநயத்தோ டனவரதம்
ஆடி ஆடிக்
கூடேனோ தமிழன்பர் கூட்டத்தில் தினந்தினமும்
குவல யத்தே!

3

கூறேனோ தமிழ்ப் பெருமை யனைத்தினையுங் குவலயத்திற்
கூறிக் கூறி
ஆறேனோ மெய்த்தமிழன் ஆகேனோ அயல்மொழியில்
அரியகல்வி
தேரேனோ தெருவெல்லாம் செந்தமிழின் முழக்கமது
செழிக்கக் கண்ணுல்
பாரேனோ தமிழ்த்தாயின் பழம்புகழைத் தினந்தினமும்
பாரின்மீதே!

4

எண்ணேனே முத்தமிழை எண்ணரிய தமிழ்மலரின்
இன்பத் தேனை
உண்ணேனே இரவுபகல் ஓயாமல் வாரியெடுத்
துண்டே தொண்டு
பண்ணேனே தமிழன்னை பழம்புகழைப் பண்டேபோற்
பாரின் மீது
கண்ணாரக் கண்டுமனம் களியேனே தாய்மானம்
காத்திடேனே?

---

## 19. தமிழன் பிரார்த்தனை.

1

எண்ணமெலாம் தமிழ்மயமாய் இருக்கவேண்டும்!
இசைப்பதெலாம் தமிழிசையாய் இசைக்கவேண்டும்!
பண்ணமுதம் தமிழமுதாய்ப் பரவ வேண்டும்!
பழுதறவே ஏழிசையைப் பயில வேண்டும்!
கண்ணயருங் காலத்தும் தமிழாம் கன்னி
காதலிலே கட்டுண்டு கலக்கவேண்டும்!
உண்ணும்போ துலவும்போ தெக்காலத்தும்
உயர்தமிழே நினைவினிலே ஓங்கவேண்டும்!

2

மேடைகளில் தமிழ்ப்பேச்சே விளங்க வேண்டும்!
வீதியெலாம் தமிழ்ப்பெயரால் மிளிர வேண்டும்!
ஆடகத்தும் நாடகத்தும் தமிழின் ஆட்சி
அன்றியொரு மொழியுலவா தகற்றவேண்டும்!
மாடமொளிர் நகரங்கள், ஊர்கள் மாண்பார்
வண்டமிழின் திருப்பெயரால் மணக்கவேண்டும்!
பாடைகளில் இணையில்லாப் பழமை வாய்ந்த
பைந்தமிழின் புகழ்புவியில் பரவவேண்டும்!

---

# 20. பாடு தமிழா!

1

பாடு தமிழா! பாடு தமிழா—நீ
பைந்தமிழ்ப் பண்ணிசைத்துப் பாடு தமிழா

வள்ளுவன் தந்த பொது மறைக் கருத்தை-உயர்
வன்னக் கவியமைத்துப் பாடு தமிழா!
தெள்ளிய சிலப்பதி காரச் சீர்த்தி—தனைச்
செகமுழுதுந் தெரியப்பாடு தமிழா!

2

கம்பன் கவியமுதக் கடலிலுள்ள—முத்துக்
கருத்தைத் தமிழிசையிற் பாடுதமிழா!
நம்புக ழேந்தி புகல் நயமனைத்தும்—இந்த
நானிலத் தாரறியப் பாடு தமிழா!

3

பாரதி பாரதத்தில் ஏறியமர்ந்து—இந்தப்
பாரை வலம் வந்து பாடு தமிழா;
மாரத வீரர்கள் தம் மரபில் வந்தேன்—என
மார்தட்டி மாணுடனே பாடு தமிழா!

4

அல்லும் பகலும் தமி ழன்னைபுகழை - நம்
அப்பர் தமிழிசைத்துப் பாடு தமிழா!
சொல்லுக்கினிய மணி வாசகனுர் – புகழ்ச்
சுந்தரர் தேவாரம் பாடுதமிழா!

5

திருவாசகம் என்னும் ஒரு வாசகம் - எட்டுத்
திக்கும் செவிகுளிரப் பாடு தமிழா!
அருள் வாசகன் ராமலிங்கசாமி – சொன்ன
அருட்பா அனவரதம் பாடு தமிழா!

---

*பா + ரதத்தில் — பாவாகிய ரதத்தில்*

6

துங்கத் தமிழ் மொழியில் பாடு தமிழா – பெரும்
தூய பரம்பொருளைப் பாடு தமிழா!
சங்கத்தமிழ் மொழியிற் பாடு தமிழா! – நம்
தாயின் புகழ் தழைக்கப் பாடு தமிழா!

---

## 21. தமிழன் பணி.

1

கவியே புனை; கதையே வனை
கலையே நினை தமிழா!
புவியே நினை எதிர் மேவினும்
மலையா திரு தமிழா!

2

நிலவோ டுயர் மலை மாணதை
மலையே யென வரைவாய்;
அலைமேவிய கடல், நீர், சுனை
நதி பாடுவை தமிழா!

3

உணர் வோவிய மெனவே உயர்
உளநூ லுரை தமிழா!
உயிர் நூ லுரை; பயிர் நூல் வரை
உயர்வா மென தமிழா!

4

வன நூலையும் மதி நூலையும்
வரைவாய்; அதி விரைவாய்!
தன நூலையும் தலையாகிய
வணமே வரை தமிழா!

5

உயிரோவிய மெனவே உரை
நடை நூல் வரை தமிழா!
உயிரேகினும் அயராதிரு;
உயர் வாயிரு தமிழா!

6

இனியாகிலும் எழில் மேவிடு
இளையாதிரு தமிழா!
கணமாகிலும் வறிதேயினி
கழியாதிரு தமிழா!

---

## 22. அருந்தமிழும் ஆங்கிலமும்.

1

அமிழ் தெனும் தமிழ் மொழி ஆய்ந்தவர்
அயல் மொழி பயில்வது தீங்கல!
தமிழ் மொழி உயர்வுற வேண்டுமேல்
சகமொழி யுறவதும் வேண்டுமே!

2

பிறமொழி பயில்வது பாரிலே
பிழையென நினைவது பேதமை!
ஒரு மொழி உயர்வுற வேண்டுமேல்
உயர்பல மொழித்துணை வேண்டுமே!

3

நயமிகு மயல் மொழி நூற்களை
நமதருந் தமிழினி லாக்குவீர்!
அயல் மொழி தனிலுள வேற்றுமை
அனைத்தையும் மனத்தினிற் போக்குவீர்!

4

தமிழினிற் பொறியியற் சாத்திரம்
தகவுடன் வெளியிட வேண்டுமே!
தமிழர்க ளனைவரும் சீர்த்தியாய்த்
தரணியில் இலகுவம் யாண்டுமே!

---

## 23. தமிழ் வாழ்வு பூத்திடுக.

1

பூத்திடுக தமிழ் வாழ்வு புவியின்மீது
பொலிந்திடுக; தமிழ் மாண்பு புனிதம் மேவி!
ஆர்த்திடுக தமிழோசை அகிலம் யாவும்
ஆண்டிடுக தமிழ் நாட்டைத் தமிழர் அன்பால்!
காத்திடுக தமிழ் நாட்டின் எல்லை யாவும்
கற்றிடுக; திருக்குறளைக் கவனத்தோடு!
சேர்த்திடுக; நம் நாட்டின் செல்வம் யாவும்
சிறந்திடுக, இணையின்றித் தமிழர் நன்றே!

2

ஊக்கிடுக எழுத்தாளர் உள்ளந் தன்னை
உயர்த்திடுக தமிழ் மொழியின் நிலையை மேலும்!
ஆக்கிடுக அருங்கலை நூல் அகிலம் மெச்ச
அறிந்திடுக பழந்தமிழர் ஆண்மையாவும்!
நோக்கிடுக பிறமொழிகள் உயர்வை நன்கு
நுகர்ந்திடுக, உயர் தமிழ் நூல் பலவும் நன்றே!
போக்கிடுக நமக்குள்ளே பேதம் யாவும்
புவியதனில் தமிழ் வாழ்வு பொலிக வென்றே!

---

## 24. தமிழ்ப் புத்தாண்டு.

தமிழ்ப் புத்தாண்டு சனித்தது பாரீர்!
புதிய இவ்வாண்டிற் பூவுல கெங்கும்
அன்பும் அறனும் அமைதியும் அமைக!
ஆக்கமும் சமரச நோக்கமும் ஆகுக!
இன்பும் இளமையும் இனிமையும் இலகுக!
ஈகையும் ஓகையும் வாகுடன் வளர்க;
உண்மையும் உறவும் திண்மையும் உறுக!
ஊக்கமும் உலையா உறுதியும் உயர்க!
எழிலும் தொழிலும் பொழிலும் வளர்க!
ஏரும் சீரும் காரும் ஏறுக!
ஐக்கியமாக அவனியோர் வாழ்க!
ஒண்மையும் வண்மையும் நன்மையும் உலவுக!
ஓதலும் காதலும் உலகில் ஓங்குக!
ஔதாரியமும் செவ்வையும் சிறக்க!
அஃகம் பெருகி அகிலம் செழித்து
அனைவரும் மகிழ்வாய் அவனியில் வாழ்க

---

## 25. செந்தமிழ் நாடு.

1

செந்தமிழ் நாடெனும் போதினிலே — எங்கள்
சிந்தை குளிருதம்மா!
எந்தையர் நாடென்ற பேச்சினிலே — மிக
இன்பம் வளருதம்மா!

2

தென் குமரி முனை சீர்வட வேங்கடம்
திரை கடல் எல்லையம்மா!
முன் புகழேந்திய முடியுடை மன்னர்கள்
மூவரும் ஆண்ட தம்மா!

3

வில்லுங் கயலுடன் வேங்கையுந் தாங்கிய
வெற்றிக் கொடி பிடித்தே
செல்லுந் திசையிற் செயக் கொடி நாட்டிய
சீர்த்தி மிகுந்த தம்மா!

4

தஞ்சம் புகுந்த பிற நாட்டு மக்கட்குத்
தந்து சிறந்த தம்மா!
பஞ்சம், பிணி, மடி யின்றிப் புகழுடன்
பண்டு திகழ்ந்த தம்மா!

---

## 26 செந்தமிழ் வாழியவே!

(எப்படிப் பாடினரோ - என்ற இசை)

**பல்லவி**

செந்தமிழ் வாழியவே—சிறந்த
நந்தவத் தாய் மொழி யாகிய தூய (செந்)

**அநுபல்லவி**

சந்திர சூரியர் தானுள காலம்
இந்தமண் மீது எழில்குறையாது (செந்)

**சரணம்**

முந்திய பெருமையுள மொழி யீதே!
முத்தமி ழெனப் புகழ் பெற்றது மீதே!
எந்த மொழியு மிதற் கிணை சொல் லொண்ணுதே!
இதனை மறந்து நாம் இருக்க வொண்ணுதே! (செந்)

---

# 27. குறளின் பெருமை.

**கண்ணிகள்**

1

வள்ளுவன் குறளை மறுவற அறிந்தோர்
உள்ளுவரோ? பிறநூல்!
தெள்ளியதாம் நெஞ்சை அள்ளுவதாம் இனித்
தினமிதைப் பயில்வோமே!

2

அறம் பொரு ளின்பம் மூன்றையும் அவனியில்
அளித்திடும் நூலிதுவே;
திறம் பெற ஓதி உரம் பெறுவோமே;
தினமும் இனி நாமே!

3

எல்லாப் பொருளும் இதன்பாலுள, இதில்
இல்லாப் பொருளுமில்லை!
கல்லாப் பிழையே அல்லாற் பிறிதில்லை
கற்றுயர் வுற்றிடுவோம்!

4

ஆலும் வேலும் பல்லுக்குறுதியாம்
அது போல் அவனியிலே
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதியாம்
நாடிப் பயின்றிடுவோம்!

(நாலும் இரண்டும் - நாலடியாரும் திருக்குறளும்)

---

# 28. எங்கள் தமிழ் மொழி.

### பல்லவி

எங்கள் தமிழ் மொழி போல—பாரில்
எங்கும் இலையாலே—இனிமை மிகும் (எங்கள்)

### அநுபல்லவி

சங்கத் தவிசிருந்து தனியரசு புரிந்து
துங்க மிகுந்த மொழியே-தொன்று துலங்கிய (எங்கள்)

### சரணம்

இன்னிசைக் கீதங்கள் ஈந்தமொழி யீதே!
எத்திசையும் புகழ!
கன்னி நறுந்தமிழ் கம்பனின் காவியம்
கண்ட தமிழ் மொழியே!
பொன்னெனவே பண்டு போற்றிய நன் மொழியே!
புனிதத் தாய் மொழியே!
பொங்கும் புகழ் பரவி எங்கும் இசையிலகித்
தங்கும் உயர் மொழியே!—பொருள் மிகும்
(எங்கள்)

---

# 29 வீரத் தமிழ் மகனே!

### பல்லவி

வீரத் தமிழ் மகனே – விழித்தெழுவாய் (வீரத்)

### அநுபல்லவி

காரிய சாதனையில் கண்ணுங் கருத்துங் கொள்வாய்!
போரிலென்று மீளத்துப் புறமது காட்டாத (வீரத்)

சரணம்

உலக மொழிகளிலே உனது மொழி முதலாய்
இலகி முனமிருந்த தேனே மறந்தனை நீ!
அலகில் புகழ்படைத்த அன்னை தமிழணங்கை
அரியாசனத் தமர்த்த உரிய தருணமிதே! (வீரத்)

---

## 30. இணையிலாத் தமிழன்.

யாது மூரே; யாவருங் கேளிர்
என்று முழக்கிய தமிழன்!
தீது செய்த பேர்க்கும் நன்மை
செய்து களித்தவன் தமிழன்!
சூது வாதி லாது வாழ்ந்த
தூய குணத்தினன் தமிழன்;
பூதல மிசை தமிழன் பெருமை
புகன்றிடில் மிகப் பெரிதே!

2

காட்டு முல் லைக்குத்தன் தேரையுதவிய
காவலன் எந்தமிழ் மன்னன்!
வேட்டுவ னுக்குத் தன் தசை தந்து புறவுயிர்
மீட்டியவன் தமிழ் மன்னன்!
பாட்டிசைத்த புல வோனுக்குத் தலைதரப்
பரிந்தவனும் தமிழ் மன்னன்
ஏட்டிலடங்குமோ? எந்தமிழன் புகழ்
யாவுமியம்புதற் கெளிதோ?

3

பொது மறை யெனப் புகழுங் குறளைப்
புவிக் களித்தவன் தமிழன்!
விதி வலியையும் மதியினுல் வெல்லும்
மேதை மிகுத்தவன் தமிழன்!

நிதி குறையினும் மதி, கதியினில்
நிகரில்லாதவன் தமிழன்!
அதி புகழுடைத் தமிழன் பெருமை
அவனியில் மிகப் பெரிதே!

---

குறிப்பு:— 2-வது பாடலில் குறிப்பிடப்பெற்றுள்ள மன்னர்கள், முறையே பாரி, சிபி, குமணன் ஆகியோராவர்.
புறவுயிர் — புருவின் உயிர்.

## 31. உழவன் உறுதி.

1

நிலமிருக்குது; நீரிருக்குது;
நெல்லு விதையும் இருக்குது!
பலமிருக்குது; உழவனுக்குப்
பஞ்சம் என்ப தேதடா!

2

ஏரிருக்குது; தாரிருக்குது
எந்த நாளும் உழவுக்கு
காரி, வெள்ளை, மயிலை, செவலைக்
காளை நாலும் இருக்குது!

3

வண்டி மாடு ரெண்டு சோடி
வாங்கிக் கட்டி யிருக்குது!
கண்ட நெல்லைக் களத்திலிருந்து
கொண்டு வந்து சேர்க்கவே!

4

நெற்றி வேர்வை சொட்டுமாறு
நிலத்தை யுழுது பயிரிட்டு
சுற்றத்தாரும் நாமும் உண்டு
சுகித்திருக்க லாமடா!

5

பஞ்சம் பஞ்சம் என்று சொல்லிப்
பயப்படாதே தம்பீ, நாம்
கொஞ்சம் கொஞ்சம் உழுது கஞ்சி
குடித்து வாழ லாமடா!

---

## 32. உழவன் உள்ளம்.

1

புதிய முறைக் கருவிகளைப்
புறக்கணித்தேனே!
புனிதமான உழவுத் தொழிலின்
புகழ் மறைத்தேனே!

2

உழுத்த மேழி; ஓட்டைக் கலப்பை
இளைத்த எருதினால்
கொழுத்த பலனை வீட்டில் கொணர்ந்து
குவிக்கக் கருதினேன்!

3

ஒண்டியாகத் துண்டு நிலத்தைக்
கிண்டிப் பயிரிட்டேன்!
ஒத்த கூட்டுப் பண்ணை முறையின்
உயர்வை மறந்திட்டேன்!

4

எண்ணிறந்த கிணறு, குளம்
எங்கும் வெட்டினால்
கண்ணியமாய் நெல் விளைத்துக்
கொட்ட லாகுமே!

5

பாசனத்தின் வசதியெங்கும்
பரவ வேண்டுமே!
பற்ருக்குறை, பங்கீடெல்லாம்
ஒழியும் யாண்டுமே!

6

புன்செய் நிலத்தில் புனலைத் தேக்கி
நன்செய் ஆக்குவேன்!
போகம் மூன்று விளையச் செய்து
மிடிமை போக்குவேன்!

7

கொள்ளும் வரகும் விளைந்த நிலத்தை
வெள்ளப் பெருக்கினுல்
நெல்லும் கரும்பும் நிமிர விளையும்
நிலங்க ளாக்குவேன்!

8

ஆளும் சர்க்கார் உதவி செய்தால்
அனைத்து மாகாதோ?
பாழும் பஞ்சம் நாட்டை விட்டுப்
பறந்து போகாதோ?

---

## 33. உழவன் உயர்வு.

1

உலகிலெவர்க்கும் அடிமையாகி
உழன்றிடாமலே
உழவுசெய்து தானுமுண்டு
பிறர்க்கும் உதவுவான்!

2

பிறரை வணங்கித் தொண்டு செய்து
பிழைக்க நாணுவான்!
உறுதியான உள்ளத் தோடும்
உலகில் வாழுவான்!

3

அழுது கொண்டும் உழுது வாழ்தல்
அவனியில் மேலாம்!
தொழுதுண்டே பின் செல்லும் வாழ்வு
சுக மளிக்குமோ?

4

கள்ளங் கபடம் மள்ள னுளத்தில்
காண இயலுமோ?
வெள்ளை யுள்ளம் உள்ள மள்ளன்
மேன்மை கொஞ்சமோ?

5

மேழிச் செல்வம் கோழை படா(து)
என்னும் வார்த்தையை
நாளும் நம்பி வாழும் உழவன்
நலிவு தீருமோ?

6

உழவன் பெருமை யனைத்து மிங்கு
உரைக்க வொண்ணுமோ?
உழவன் செய்யும் உதவி தன்னை
மறக்க லாகுமோ?

7

உணவுப் பஞ்சம் போக்க உதவும்
அரசிய லார்கள்
மன முவந்து மள்ளன் வாழ
வகை செய்வார்களா?

## 34. உழவன் பொங்கல்

1

ஆண்டு முழுதும் வயல் வெளியில்
அலுக்க உழைக்கும் உழவரெலாம்
ஈண்டு பயிருக் கொளி யுதவி
எண் கதிர் பரப்பும் கதிரவனை
வேண்டித் தொழவே விருப்புடனே
விளைந்த செந்நெல் சோறட்டு
வேண்டி யழைத்து விருந்துடனே
விருப்பா யுண்ணும் நாளிதுவே!

2

மங்களச் சின்னம் மஞ்சளுடன்
மாரன் கணையாம் கரும்பினொடும்
பொங்கல் வைத்துப் பூசித்தே
புனிதத் தையை வரவேற்று
எங்கும் இன்பம் பொங்கிடவே
யாவரும் சுகவாழ்(வு) எய்திடவே
மங்களம் நன்கு தங்கிடவே
மகிழ்வாய் வாழும் நாளிதுவே!

---

## 35. மருத மள்ளர் வாழ்வு!

மருத நிலத்து மக்களாம் மள்ளர்
எருதுகள் தம்மை ஏரிற் பூட்டி
மருதம் பாடி மகிழ்வுடன் உழுதனர்!
அன்னையர் பாடும் அன்புப் பாட்டால்
மகிழும் குதலை மக்களைப் போன்று
ஏரிற் பூட்டிய ஏறுகள் இனிய
பாட்டில் மயங்கி நாட்டமாய் உழுதல்,
மனவலி கடந்தோர் மாட்(டு) ஐம்பொறிகள்
வசமாம் செயலை மானிய தன்றே!

**உழுபடை** தேய உழுதுநீர் பாய்ச்சி
நிலஞ் செருக்கி நெல்நாற்று விட்டு
நல்ல முறையில் நட்டநெற் பயிரில்
உழத்தியர் தம்வாய், கண்,முகம் ஒக்கும்
அல்லி, குவளை, தாமரை யாகிய
களைகளைப் பகையெனக் கருதிக் களைந்தனர்!

**மேலாம்** நூலின் உரைபோல் விரிந்த
நெற்கதிர் யாவும் கற்புடை மகளிர்
தலையெனத் தாழ்ந்து வணங்கிய தன்றே!
அன்பினை விதைத்து ஆர்வநீர் பாய்ச்சும்
தொண்டர்கள் தமக்கு அண்டர் நாயகனின்
அருள் விளைவதுபோல் நெல் விளைந்ததுவே!

**விளைந்த** நெல்லை விரைவினில் அறுத்துக்
களத்திற் கொணர்ந்து அடித்துத் தூற்றி
ஊர்க் காணிக்கும் உயர் தேவர்க்கும்
வறியவர் பலர்க்கும் மகிழ்வாய் வழங்கி
மீந்த நெல்லை வீட்டிற் கொணர்ந்து
சுற்றமும் விருந்தும் சூழ உண்டு
துறவிகள், பரமன் அடியார் தமக்குப்
பசிக்கு உணவும் பிணிக்கு மருந்தும்
உடுத்த உடையும் உறையுளும் இன்ன
பிறவும் நல்கிப் பீடுற
வாழ்ந்தனர், மருத மள்ளர்கள் மாதோ!

---

## 36. அன்புச் சுடர்.

1

அன்புச் சுடரும் அணைந்ததடா!
அஹிம்சையின் சிகரம் அழிந்ததடா!
என்பும் உருகும் செய்தியிதே!
இதயங் குமுறி எரியுதடா!

2

ஏசுவும் புத்தனும் இணைந் தோன்றாய்
இகத்திற் பிறந்தான் எனும் மேலோன்!
மாசறு காந்தி மாமுனிவன்
மறைந்தான்; உலகம் வருந்தியதே!

3

மாந்தர்கள் தம்முள் மாணிக்கம்
மாதவ முனிவன்; மா தூயன்!
காந்தி மகானின் உடல் கண்டீர்!
கைப்பிடி சாம்பல் ஆனதடா!

4

அண்ணலைத் தந்தையை அருங் குருவை
ஆசிய சோதியை இழந்தோமே!
புண்ணில் வேல்புகுந் தாற்போல் தீப்
புழுப்போல் துடித்துப் புழுங்கினமே!

5

காந்தி விளக்கும் அணைந்திடுமோ?
காரிருள் அதனைச் சூழ்ந்திடுமோ?
சாந்த சொரூபம் சாய்ந்திடுமோ?
சத்தியக் குன்றம் சரிந்திடுமோ?

6

விளக்கணைந்தாலும் இருள் வருமோ?
விளக்கின் சக்தி வீண்போமோ?
இளைக்கும் மக்கள் யாவர்க்கும்
என்றும் சுடரை ஈயாதோ?

---

## 37. ஆசிய சோதி அணைந்ததடா!

1

என்பும் உருகி இளகுதடா—எங்கள்
இதயங் குமுறி எரியுதடா!
அன்பின் சிகரம் அழிந்ததடா—மண்ணில்
ஆசிய சோதி அணைந்ததடா!

2

மாந்தரின் உள்ளம் கொதிக்குதடா—அந்த
மாதவன் தேகம் மறைந்ததினுல்!
சாந்த சொருபனின் சாம்பல்திரி வேணியில்
சங்கம மாகிச் சிறந்ததடா!

3

சுதந்திரம் உதவிய தூயன் உடல்தன்னைத்
துப்பாக்கிக் குண்டு துளைத்ததடா!
இதந்தரும் மூர்த்தியைக் கொல்ல இசைந்தவன்
இந்தியன் என்பது வெட்கமடா!

4

கன்னத் தறைந்திடும் கன்மனத் தானுக்கும்
கருணைசெய் ஏசு கிறிஸ்துவைப்போல்
மன்னுயிர் யாவும் இதமுற்று வாழ்ந்திட
மாமுனி காந்தி மடிந்தனனே!

5

காந்தி மறைந்ததை எண்ணித் தினந்தினம்
கண்ணீர் வடித்துப் பயனில்லையே!
சாந்த முனிவரன் சாற்றிய பாதையில்
தாய்த்திரு நாட்டுக் குழைத்திடுவோம்!

---

## 38. மகாத்மா மதுரை வருகை!

(3—2—1946ல்)

1

திருநாளொன்று சிலநாளில்
சீர் மதுரைக்கே வருகிறது!
அருநாளாகும் அந்நாளே!
அற்புத காந்தி வருநாளாம்!
பெருநாள் என்றால் பிழையுண்டோ?
பேரார் மதுரை வாசிகளே!
வருவீர் காந்தி மாமுனியை
மனமகிழ்வாக வரவேற்போம்!

2

முத்தமிழ் மூதூர் மதுரைக்கும்
முருகன் தலமாம் பழநிக்கும்
உத்தமன் காந்தி வருகின்றான்
ஒரு வாரத்துக் குள்ளாக!
இத்தல மாந்தர் எல்லோரும்
ஏத்தும் தூயன் இவனன்றோ?
சத்தியம் சற்றும் தவறுதான்
தாளைப் பணிவோம் தமிழர்களே!

3

எளியார் நேயன் இவனன்றோ?
இன்னல் தீர்ப்பான் இவனன்றோ?
அழியாப் புகழான் இவனன்றோ?
அன்பே உருவான் இவனன்றோ?
சலியா உளத்தன் இவனன்றோ?
சர்க்கா வீரன் இவனன்றோ?
தொழுவோம் வாரீர், தோழர்களே!
தூய காந்தித் தோன்றலையே!

# 39. காந்தி பிறந்தான்.

1

காந்தி பிறந்தான் — எங்கள்
காந்தி பிறந்தான் — புவி
மாந்தர்கள் துன்பினை ஆய்ந்து தவிர்த்திடக் (காந்தி)

2

சாந்தி புகன்றான் — பெரும்
சாந்தி புகன்றான் — இந்தத்
தாரணி மேல்கொடும் போரினை வென்றிடக் (காந்தி)

3

வேந்தனாய் நின்றான் — மண்ணில்
வேந்தனாய் நின்றான் — மக்கள்
வேதனை தீர்சத்ய சோதனை செய்திடக் (காந்தி)

4

புத்தனை வென்றான் — புகழ்ப்
புத்தனை வென்றான் — பெரும்
சுத்த சமரச சித்திய டைந்திடக் (காந்தி)

5

சத்திய வந்தன் — இவன்
சத்திய வந்தன் — என்றும்
தன்னுயிர் போயினும் மன்னுயிர் காத்திடும் (காந்தி)

6

நித்தியம் வாழீ — புகழ்
நித்தியம் வாழீ — நனி
இத்தல மானிடர் நத்தும் முனிவரன் (காந்தி)

---

# 40. இரத்தக் கண்ணீர்!

1

அன்னையின் விலங்கை அகற்றிவிட்டோம்!
ஆயினுமென்ன? நமக்குள்ளே
இன்னமும் சண்டை நீங்கவில்லை!
இந்நிலை மிகவும் இழிவாகும்!
எண்ணரும் மக்கள் இறந்தார்கள்!
இரத்தக் கண்ணீர் வடித்தோம் நாம்
அன்னியன் ஆட்சி மேல் போலும்
என்னும் நிலையில் இன்றுள்ளோம்!

2

இந்தியத் தாயின் எழிலுடலை
இரு கூருக்க இசைந்தோமே!
முந்திய காலம் முன்னோர்க்குள்
முதிர்ந்த உறவை முறித்தோமே!
சிந்திய ரத்தம் சிறிதளவா?
செத்தவரின் தொகை எத்தனையோ?
இந்தப் பழிகள் இல்லாமல்
இனிமே லேனும் இணைந்திருப்போம்!

3

புண்ணிய பாரத பூமிதனில்
பூசல், நாசம், கொலை யென்னில்
கண்ணியமாமோ? கருதுங்கள்!
கண்டவர் எள்ளி நகையாரோ?
என்னரும் இந்து முஸ்லீம்காள்!
ஏனோ சண்டை யிடுகின்றீர்?
அன்னை நமக்கே ஒருவ ளன்றோ?
அவளின் புதல்வர் நாமன்றோ?

4

ஆண்டு பலவாய் அனைவருமே
அல்லும் பகலும் போராடி
ஈண்டு பெற்ற சுதந்திரத்தை
இனி நாம் பறிகொடுத் தேங்குவதோ?
வேண்டாம் நமக்குள் வேற்றுமைகள்
வெகுளியை அறவே விடுவோம் நாம்!
யாண்டும் அன்பின் வலிமையினால்
இனிதே வாழ்வோம் இகமீதே!

---

## 41. இரும்பு மனிதன் எங்கே?

1

கரும்பும் நெல்லும் கனிவகையும்
களிப்பாய் விளைக்கும் உழவர்களும்
அரும்பும் வியர்வை உதிர்ந்திடவே
ஆயிரந் தொழில்செய் மனிதர்களும்
விரும்பும் நலங்கள் யாவையுமே
விழைந்தே செய்த விறல் வீரன்!
''இரும்பு மனிதன்'' எமது படேல்
எங்கே சென்றான் இயம்பீரே!

2

உலகில் திகழும் உயர் நாட்டின்
உதவிப் பிரதமர் எமது படேல்!
அலகில் புகழ்சேர் அறிவாற்றல்
அஞ்சா நெஞ்சம் அமைந்தவனும்
கலகம், பகைமை காட்டாமல்
காரிய சாதனை காணுபவன்!
குலவும் விண்ணோர் கூட்டுறவைக்
கொள்ளும் எண்ணம் கொண்டானோ?

3

நல்லவரான மனிதரெலாம்
நமனுலகத்தை நாடுகிறார்!
எல்லையிலாத இத்துன்பால்
இந்திய மக்கள் ஏங்குகிறார்!
சொல்லவு மொண்ணு வல்லிரும்புத்
தூணைக் கரையான் தின்றதுவோ?
வல்லப நாபன் எமது படேல்
மாண்மிகும் உடலம் மறைந்ததுவே!

4

விந்திய மலையே விழுந்தாலும்
வேலை பொங்கி எழுந்தாலும்
சந்திர சூரியர் ஒழிந்தாலும்
தாரணியெல்லாம் அழிந்தாலும்
சிந்தனை சொல்லில் செயல்தன்னில்
சிறிதும் திறம்பாச் சீரியனும்!
நந்தவத் தலைவன் வல்லபனை
நாமினிக் காணும் நாளென்றோ?

---

## 42. மறைந்ததோ? அரவிந்த மலர்!

1

கானகம் சென்று உடல் வருத்திக்
கடுந்தவம் செய்து கலங்காமல்
தானெனு மகந்தை தனைக் கொன்று
தத்துவ ஆய்வால் மனம் வென்று
மானில மக்கள் மாட்சியுற
வாழ்நாள் முழுதும் வழிகாட்டி
மாநகர் புதுவை தனில் வாழ்ந்த
மலர் அரவிந்தம் மறைந்ததுவே!

## 2

பாரத நாட்டில் பயிராகிப்
பாரில் மணத்த அரவிந்தம்!
மாரத வீரர் மனம் நாணும்
வலிமிக வாய்ந்த அரவிந்தம்!
காரண கர்த்தன் கண்ணபிரான்
கழலிணை கண்ட அரவிந்தம்!
பூரண ஞானம் பொலிந்திட்ட
புகழ் அரவிந்தம் போனதுவே!

## 3

தேச பக்தர் திலக மெனத்
தீங்கவி செப்பும் கவிஞனென
மாசில் கர்ம வீரனென
மாண்மிகு தத்துவ ஞானியென
ஆசை மூன்றும் ஆணவமும்
அறவே துறந்த துறவியெனத்
தேசாய் வாழ்ந்த அரவிந்தச்
செம்மல் எங்கோ சென்றதுவே!

## 4

மலர் அரவிந்தம் மறைந்திடுமோ?
மகிழ்வாய்த் திரும்பி வாராதோ?
மலரிதன் தூய வாசனையை
மறுமுறை நுகரும் வாய்ப்பிலையோ?
மலர் மறைந்தாலும் மணம் போமோ?
மறைவை எண்ணி வருந்தாதீர்!
அலைகடல் சூழும் அவனியெலாம்
அரவிந்த மலர்மணம் மாருதே!

# 43. தமிழ் முனிவன் மறைவு

1

தமிழ்ப்பண் பாட்டின் உறைவிடமாய்த்
தானே திகழ்ந்த தவப்பெரியோன்!
சமரச சுத்த சன்மார்க்கம்
தழைத்திட உழைத்த தனிச்சிற்பி!
நமதரும் நாட்டு விடுதலைக்கே
நனிஉழைத் திட்ட நற்றொண்டன்!
தமிழ்முனி என்னும் திரு. வி. க.
தாரணி வாழ்வை நீத்தனனே!

2

"என்கடன் பணிசெய் திருப்பதுவே"
என்னும் அப்பர் எழில்மொழிபோல்
தன்னலம் சிறிதும் கருதாமல்
தாரணிக் குழைத்த தவப்புதல்வன்!
பெண்நலம் உலகில் பெரிதுயரப்
பெரும்பணி புரிந்தோன்; தமிழ்நாட்டின்
கண்மணி போன்ற திரு. வி. க.
காசினி வாழ்வை நீத்தனனே;

3

வாழ்நாள் முழுதும் வறுமையிலே
வாடியும் செம்மை வழுவாதான்!
சூழ்வார் தமது சுகங்கருதிச்
சொந்த நலத்தைத் துறந்தவனும்!
வாழ்வின் குறிக்கோள் "அந்தண்மை"
என்றே வாழ்ந்த மாஞானி!
ஊழின் வலிக்கே ஆளாகி
உலகின் வாழ்வை நீத்தனனே!

4

ஈடிணை யில்லாத் தமிழ்த்தொண்டை
இயற்றிய பெரியோன் திரு. வி. க.
நாடுயர் வுறவே நனியுழைத்து
நல்லுடல் நலிந்த திரு, வி. க.
பீடுறும் அன்பைப் பேணியவன்;
பின்னும், ஏழை பங்காளன்!
ஆடியைப் போன்ற மனமுடையான்
அம்புவி வாழ்வை நீத்தனனே!

## 44. கம்பமணி மறைவு

1

அந்தோநொந் தோமெந்தம் அரியபெருந் தமிழ்த்தலைவ;
அரிஞ ரேறே!
தந்தாய்நம் தண்டமிழாம் தாய்மொழியிற் பன்னூல்கள்
தகவி னுய்ந்தே
எந்தாய் நீ கம்பனது கவியமுதை எழிலுடனே
இனிதே யாக்கித்
தந்தாயே, குற்றாலந் தனில்வாழ்ந்த பெரியோனே;
தமிழின் குன்றே!

2

அன்பார்ந்த சிதம்பரநா தப்பேரார் ஐயா, நின்
அருமை மேவும்
இன்பார்ந்த சொற்பொழிவின் எழில்தன்னை இனியாங்கள்
என்றே காண்போம்!
பண்பார்ந்த தமிழிசையின் வளர்ச்சிதனில் நின்னார்வம்
பகரற் பாற்றே?
நண்பார்ந்த கம்பமணி நின்மறைவால் தமிழ்த்தாயும்
நலிவா ளன்றே?

3

செந்தமிழில் முத்தொள்ளா யிரமதனைப் பதிப்பித்துச்
சிறந்தே நின்றாய்!
அந்தமிகும் **குறவஞ்சி, பரணி**யெனும் நூற்கருத்தை
ஆய்ந்தே விண்டாய்!
பைந்தமிழில் **இதய ஒலி, கம்பர் யார்?** எனுமுரைகள்
பலவுந் தந்தாய்!
அந்தோ! நின் பூதவுடல் மறைந்தாலும் நினதுபுகழ்
அழியா தன்றோ?

---

## 45. தென்முனிவன் எங்கேயோ?

**கண்ணிகள்.**

1

வானருவி பாய்ந்ததென வண்டமிழிற் சொல்விரித்த
தேனருவிக் குற்றாலத் தென்முனிவன் எங்கேயோ?

2

எண்ணித் தினமகிழும் இன்பவுரை நல்கிவந்த
வண்ணத் தமிழ்ச்சுடரும் வானில் மறைந்ததுவோ?

3

கம்பன் கவிக்கடலைக் கடைந்தெடுத்த முத்தையெல்லாம்
உம்பர் உலகினிலே உவந்துவிற்கப் போயினனோ?

4

பாட்டில் மனமொன்றிப் பதம்விரித்த பண்பாளன்
நாட்டைப் பிரிந்துவிண்ணோர் நல்லுலகுக் கேகினனோ?

5

வற்றாத் தமிழ்வளத்தை வாரி வழங்கிவந்த
குற்றால நீரருவி கோடையினால் வற்றியதோ?

6

செஞ்சொற் கவிதைசெப்பும் சிதம்பரநா தப்பெரியோன்
அஞ்சொற் கவிகேட் டகமகிழ்வதென்னாளோ?

# 46. தியாகிகள் நினைவு

1

நாட்டு விடுதலை கூடியது!
சுதந்திரம் நம்மை நாடியது!
வாட்டமும் மிடியும் நோய்நொடியும்
மதுவும் நமைவிட் டோடியது
தேட்டமுடன் தாய் விடுதலைக்குத்
தியாகம் செய்த தமிழ்மக்கள்
கூட்டத் தாரை மனமாறக்
கும்பிட்டே நாம் நினைவுறுவோம்!

2

இப்புவி புகழும் கவியரசன்
சுப்பிர மணிய பாரதியார்!
செப்பரும் சேவை செய்திட்ட
சீலன் வ. வெ. சு. அய்யர்!
கப்பல் ஓட்டிய தமிழனெனும்
கண்ணிய வ. உ. சிதம்பரனார்!
ஒப்பரும் சேவைப் பயனாக
உற்றோம் இந்நாள் விடுதலையே!

3

கோரப் போலீஸ் தடியடிக்குப்
பலியா கியநம் குமரனையும்
வீரன் வாஞ்சி ஐயருடன்
மேலோன் சுப்பிர மணியசிவா!
சாரம் நிறைந்த சொல்மன்னன்
சத்திய மூர்த்தி ஐயரையும்
யாரே மறப்பார்? இந்நாட்டில்
என்றும் மறவா திவர்நினைவே!

# 47. வாழ்க ராஜாஜி!

1

இமையோர் மெச்சும் ராஜாஜி!
எண்ணித் துணியும் ராஜாஜி!
குமையும் மக்கள் கொடுந்துன்பைக்
கொய்யுங் குணவான் ராஜாஜி!
சமயம் பலவும் சமமென்னும்
சாரம் தேரும் ராஜாஜி!
நமதர சாங்க நாயகனாய்
நன்றே திகழ்ந்த ராஜாஜி!

2

காந்தியின் தோழன் ராஜாஜி!
கருணை நிறைந்த ராஜாஜி!
மாந்தரிற் சிறந்த ராஜாஜி!
மதிநலம் வாய்ந்த ராஜாஜி!
சாந்த குணாளன் ராஜாஜி!
தத்துவ ஞானி ராஜாஜி!
ஆய்ந்த அறிஞன் ராஜாஜி!
அன்பர்க் கினியன் ராஜாஜி!

3

கதருடை யணியும் ராஜாஜி!
காட்சிக் கெளியன் ராஜாஜி!
பதரென வாழும் பஞ்சையரைப்
பார்த்துப் பதைக்கும் ராஜாஜி!
இதமொழி பேசி எதிரிகளின்
இதயங் கவரும் ராஜாஜி!
விதம் விதமான சிறுகதைகள்
விள்ளும் மேதை ராஜாஜி!

## 4

மாந்தருள் உயர்வு தாழ்வென்னும்
வழக்கம் அழிக்கும் ராஜாஜி!
காந்தியின் கொள்கை வழுவாமல்
கடைப்பிடித் தொழுகும் ராஜாஜி!
வாந்தியும் கேடும் மங்காத
வறுமையுந் தந்த மதுவரக்கன்
மாய்ந்திட மண்ணில் வழிசெய்த
மாதவ முனிவன் ராஜாஜி!

## 5

வேதமறிந்த ராஜாஜி!
விற்பன மேவும் ராஜாஜி!
போதம் பொலியும் ராஜாஜி!
பொற்பால் இலகும் ராஜாஜி!
சாதனை மிக்க ராஜாஜி!
தமிழ்த் தொண்டாற்றும் ராஜாஜி!
பூதல மக்கள் புகழ்ந்தென்றும்
போற்றும் புனிதன் ராஜாஜி!

## 6

நகைமொழி நவிலும் ராஜாஜி!
ராட்டைப் போற்றும் ராஜாஜி!
அகமும் புறமும் ஒன்ருக
அமைந்த அறிஞன் ராஜாஜி!
சுகமும் துன்பும் சமமென்று
மதிக்குந் தொண்டன் ராஜாஜி!
இகமேல் என்றும் நலமெய்தி
இனிதே வாழ்க ராஜாஜி!

# 48. நிகரிலா நேரு!

1

மிஞ்சுவலி நெஞ்சுடைய மேரு—எங்கள்
மேதைமிகு பண்டித ஜவஹர்லால் நேரு!
வஞ்சமுடன் அஞ்சலறு தீரன்—உடலின்
வடிவழகில் படியதனில் மாணுடைய மாரன்!

2

பாரதியின் பாலர்களுள் சிங்கம்—பண்பில்
பத்தரைமாற்று எனப் பாரிலொளிர் தங்கம்!
சாரதியாய் பாரதநன் னுட்டை—இவன்
தான்நடத்தும் மார்க்கமது தாரணியில் துங்கம்!

3

சோம்பாத தீரமுள நேயன்—என்றும்
சொற்பந்தல் போடாது தொண்டுசெயுந் தூயன்!
தேம்பாத சிந்தையுள சீமான்—தேசத்
தியாகிகள் தம்மிலிவன் சீர்த்திமிகு கோமான்!

4

புன்னகையில் இன்னல்களை வெல்வான்—எந்தப்
போதினிலும் மேதைமிகும் நீதிமொழி சொல்வான்!
மன்னனென மாளிகையில் வாழ்ந்தான்—இன்று
மன்னுயிரின் இன்னல்களை வன்மையுடன் ஆய்ந்தான்!

5

அண்ணலெனும் அன்பினெளி "காந்தி"—சொன்ன
அறவழியைச் சிரமதனில் ஆர்வமுடன் ஏந்தி
கண்ணிலுள மாமணியைப் போல—நாட்டைக்
காக்குமிவன் நீடூழி காலம்நனி வாழி!

---

## 49. நீடூழி வாழ்க நேரு!

1

வந்தே மாதர மெனு மாண்பார்
மந்திர பலத்தால் மனவலியால்
சுந்தர மான தோற்றத்தால்
சொல்லின் உயர்வால், தூய்மையினுல்
இந்த உலகோர் இதயத்தை
இனிதே கவர்ந்த இத நேரு!
இந்திய நாட்டின் பிரதமராம்
எங்கள் ஜவஹர் வாழியவே!

2

ஏழைகள் தோழன் எம் நேரு!
இரக்கம் சிறக்கும் எழில் நேரு!
கோழைத் தனத்தைக் குழி தோண்டிக்
கொன்று புதைத்த குணமேரு!
பாழும் அடிமை விலங்கென்னும்
பந்தங் கொய் பண்டித நேரு!
நாளும் புவியில் நலமேவி
நன்றே நீடு வாழியவே!

# 50. மாலையின் வருகை.

இடையர்கள் காதற் கீதம் இசைத்தனர்;
இடைச்சிய ரெல்லாம் எதிர்ப்பாட் டியம்பினர்!

கன்றைக் காணும் கருத்துத் தூண்ட
அம்மா என்று அரற்றிய வண்ணம்
மேய்ந்த மாடுகள் வீடு திரும்பின!

புல்லால் அமைந்த படுக்கையிற் புரள
மிருகம் யாவும் விரைந்து சென்றன!

குட்டையில் வாத்துகள் க்வாக் க்வாக் என்று
சத்தம் செய்தன; கல்விச் சாலைச்
சிறுவர்கள் விடுதலை சேர்ந்தவ ரொப்ப
மிக மகிழ்வாக வீட்டுக் கோடினர்!

காற்றின் சத்தம் காதில் வீழக்
குக்கலொன்று பலமாய்க் குரைத்தது!

கவலையற்ற மக்களிக் காட்சியைக்
கண்டு நகைத்துக் களிப்புற்றனரே!
இத்தனை ஓசையும் ஒன்ருய் இணைந்து
காற்றில் கலந்து கடிதே சென்று
மானிடர் மனதில் மகிழ்வை யூட்ட
மாலை நேரம் வந்தது காணீர்!

## 51. தீபாவளித் திருநாள்.

செந்தமிழ் நாட்டுச் சீரிய மக்காள்!
வந்தது தீபாவளி யெனும் திருநாள்!
நரகா சுரனும் நலிவுகள் யாவும்
கண்ணன் கணையாம் திண்மையால் நீங்கின!
ஆடும் கோழியும் அறுப்பதை விட்டுக்
கேடும் அடிமைத் தளையும் கொய்மின்!
அன்னிய ஆடை அனைத்தையும் அகற்றிக்
கண்ணிய மான கதருடை கட்டுமின்!
திருவண் ணாமலைத் தீபம் போன்று
அறிவுச் சுடரை அகத்தினில் ஏற்றுமின்!
தாய் மொழி யான தமிழிற்பாடி
ஆயிழையாரும் ஆண்களும் களிமின்!
வாழிய தீபா வளியெனும் மாநாள்!
வாழிய பைந்தமிழ் மாநில மீதே!

---

## 52. பாமையின் வீரம்!

1

கண்ணனும் பாமையும் வில்லினைத்—தங்கள்
கையிலெ டுத்துவி ரைந்துமே—நல்ல
வண்ணமிகும் பரி பூட்டிய—தேரில்
வாகுட னேறிய மர்ந்தனர்!

2

எண்ணவி யலாத வேகத்தில்—எங்கும்
எட்டுத்தி சையும திரவே—இரு
கண்ணினை மூடித்தி றக்குமுன்—பரி
காதம் பறந்தது காணுவீர்!

3

வில்லினைக் கையிலெ டுத்ததும்—கண்ணன்
வேர்த்தும யங்கிவி ழுந்தனன்!—நல்ல
வல்லிக் கொடியிடைப் பாமையும்—வில்லை
வாங்கிக் கணைதொடுத் தெய்தனள்!

4

மாதவ ருக்கிடர் செய்தவன்—பல
மாதர்க்குத் துன்பமி ழைத்தவன்!—பெருந்
தீதுருவாம் நர காசுரன்—அங்கு
செத்தும டிந்துவி ழுந்தனன்!

5

பெண்ணறம் சத்தியம் காத்தது—கண்டு
பெருமித முற்றனர் தேவர்கள்—இந்த
மண்ணுல கிலுள மாந்தரும்—இந்த
மாபெரும் நாளில்ம கிழ்ந்தனர்!

6

பாரினி லிப்பெரும் நாளினை—தீபப்
பண்டிகை யென்னப்ப கர்ந்துமே—வெகு
சீருடன் ஆண்டுகள் தோறுமே—மக்கள்
சிந்தைம கிழ்ந்துகொண் டாடினர்!

---

## 53. இலவச வைத்தியர்.

உயிர்களின் செல்வம் உடல்நல மாகும்!
உடல்நல மின்றேல் உளநல மில்லை!
நம்முடல் நலத்தைத் தம்முடல் நலமாய்க்
கருதும் வைத்தியர் மூவரைக் காண்மின்!
அழைத்தால் மிகவும் அன்பாய் வருவர்;
வேண்டும் உதவியை விரைந்தே செய்வர்!

அழையா தவர்பால் அணுகா ரிவரே!
செலவொரு காசும் இல்லை தெரிவீர்!
இவர்பெயர் சொன்னால் ஏகும் நோயே!
இவர்துணை கொள்ளின் என்றும் இன்பே!
இலவச வைத்தியம் செய்யும் இவரை
விடுத்துப் பிறரை விரும்புவ தேனோ?
உலகத் தார்க்கு உடல்நல முதவும்
இவர்கள் மூவர் யாரென அறிவாம்!

* * *

மேதையாம் ஒருவர் ''மிதா காரம்''
மற்றோர் வைத்தியர் ''மனச் சாந்தி'' என்பார்!
''ஆனந்தம்'' மூன்றும் அருமை வைத்தியர்!
இத்தனை சிறந்தார் என்றும் நம்முடன்
இருந்தும் நோயால் வருந்துதல் நன்றோ?
இனிமே லேனும் இன்னவர் துணையால்
நனிவாழ்ந் திடுவோம் நானிலத் தோரே!

---

## 54. மனிதன் நிலை!

புள்ளினங்கள் இரைக்காகப் புவியின் மீது
புல்லடிமைத் தொழில்புரிந்து புழுங்க வில்லை!
செல்லினங்கள் தம்முணவைத் தாமே தேடித்
தின்னுவது செகமறிந்த செய்தி யன்றோ?
பல்லுயிரும் சுயமாகப் பசியை மாற்றும்
பான்மைதனைப் பாரின்மிசை பார்த்தி ருந்தும்
சொல்லரிய பிறவியெனும் மனிதன் சோர்ந்து
சோற்றுக்காய்ப் படுந்துயரம் சொல்லொண் ணாதே!

---

## 55. எண்ணிப்பாருங்கள்!

1

இத்தினத்தில் பத்திரிகை என்னும் பெயருடன்
புற்றிலிருந் தீசல்போலப் போந்ததே பல!

2

பத்திரிகைப் பெயர்களெண்ணிப் பார்க்கவும் முடியா!
கற்பதற்கும் நேரமுண்டோ காலம் போதாது!

3

பத்திரிகை பலவும்மக்கள் படிக்கத் தகுந்ததோ?
இத்தினத்தில் நூற்கள்யாவும் ஏற்க இயைந்ததோ?

4

காயிதத்தைக் கருமையாக்கிக் கற்றை கட்டினுல்
ஆயும்நூலென் றதற்குப்பேரும் அமைந்து போகுமோ?

5

அச்சுயந்தி ரத்திலிட்டு அழகு படுத்தினுல்
மெச்சிக்கற்கும் நூலதாக வெளிவந் துலவுமோ?

6

பாலனைத்தும் நற்பசுவின் பாலு மாகுமோ?
நூலனைத்தும் கற்கத்தக்க நூலு மாகுமோ?

---

காயிதம்—காகிதம்.

## 56 அவன் யார்?

குயிலே! உனக்குக் குரலினிமை
கொடுத்தவன் யாரோ கூறுய் நீ!
மயிலே! உந்தன் தோகையிலே
வர்ணந் தீட்டிய ஓவியன் யார்?
மலையே! உந்தன் மாண் சிகரம்
வனைந்தவன் யாரோ வழங்காய் நீ!
கடலே! உந்தன் கரைதன்னைக்
கட்டி முடித்த காரணன் யார்?
நிலவே! உன்னை நீள்வானில்
நிர்மா ணித்தவன் யாரோ? சொல்!
பரிதீ! நீ தினம் பவனிவரப்
பாதை யமைத்த மேதையும் யார்?
அலையே! பொங்கி அழிக்காமல்
அமைதி யளித்த அற்புதன் யார்?
ஆலே! உன்னைச் சிறுவிதையுள்
அடக்கி யமைத்த மேலோன் யார்?
கருவே! உன்னை முட்டைக்குள்
காத்துண வளித்த கர்த்தனும் யார்?

## 57. சொர்க்க பூமி

1

இன்பமீயும் பூமி—எங்கும்
எழில் நிறைந்த பூமி!
துன்பமற்ற பூமி—தூய
சொர்க்க பூமி யீதே!

2

ஏழை செல்வ ரேது?—இங்கே
ஏற்றத் தாழ்வு ஏது?
வாழும் மக்க ளெல்லாம்—நாளும்
மனிதராக வாழ்வார்!

3

நாளும் வேலை யுண்டு—உழைத்தால்
நல்ல கூலி யுண்டு!
ஆளும் வர்க்க மில்லை—மற்றும்
அடிமை யாரு மில்லை!

4

வேண கல்வி யுண்டு—எங்கும்
மிகுந்த செல்வ முண்டு!
ஆணும் பெண்ணு மிங்கே—நிகராய்
அளவ ளாவி வாழ்வார்!

5

கருப்புச் சந்தை யில்லை—கொள்ளைக்
கயவர் கூட்ட மில்லை!
விருப்பு வெறுப்பு மில்லை—இங்கே
வேலை நிறுத்த மில்லை!

6

உணவுப் பஞ்ச முண்டோ?—உடுக்கும்
உடைக்குப் பஞ்ச முண்டோ?
கனவிலேனும் வறுமை—நோயைக்
காண மார்க்க முண்டோ?

7

பேத மற்ற பூமி—மக்கள்
பிழைப்புக் கேற்ற பூமி!
ஏத மற்ற பூமி—இதையே
சொர்க்க பூமி யென்பார்!

---

# 58. இழந்ததை எய்தினோம்!

1

மண்ணினை இழந்த மன்னன்
மணிமுடி தரித்தாற் போலும்
கண்ணினை இழந்தோன் மீண்டும்
காட்சியைப் பெற்றாற் போலும்
எண்ணரும் மிடியில் ஆழ்ந்தோன்
இருநிதி ஏற்றாற் போலும்
உன்னரும் சொந்த ஆட்சி
உற்றனம் இன்று நாமே!

2

இப்பெரும் பேற்றை யின்று
எய்துவான் வேண்டிப் பன்னாள்
செப்பரும் தியாகம் செய்த
சீலரை நினைவிற் கொண்டு
ஒப்பரும் உறுதியோடும்
ஒற்றுமை உள்ளத் தோடும்
முப்பெரும் புவியும் வாழ்த்த
வாழ்ந்திட முனைவோம் வாரீர்!

3

அயலவர் தயவை நாடும்
நினைவினை யறவே நீக்கிச்
செயல்தனில் சிரத்தை யோடும்
சிந்தையில் தூய்மையோடும்
மயலறப் பணிகள் செய்து
வகுப்புவா தங்கள் கொய்து
புயலெனும் போர்கள் நீக்கிப்
புவிமிசை இனிது வாழ்வோம்!

---

# 59. இதமுறல் என்றோ?

1

உண்ணவோ உவுணமில்லை; உடுக்கவோ கந்தையில்லை!
திண்ணையில் தெருவில் மண்ணில் தேகத்தைப் போர்த்திடாது
கண்ணிமை தன்னை மூடிக் கிடந்துமே காலந்தள்ளும்
எண்ணரும் ஏழைமக்கள் இதமுறல் எள்றோ? சொல்லீர்!

2

காலையில் வேலைக் கேகிக் கடுமையாய் உழைத்த பின்பு
மாலையில் வீடு நோக்கி வந்துமே அரை வயிற்றுக்
கூழையே குடித்து நாளும் குற்றுயிராக வாழும்
ஏழைகள் துன்பம் நீங்கி இதமுறல் என்றோ? சொல்லீர்!

3

ஓயுதலின்றி வேற்றூர் செல்பவர் உண்ணும் ஹோட்டல்
வாயிலில் வீழும் எச்சில் வாழையின் இலைக்காய் வந்த
நாயுடன் சண்டை செய்து நாலிரு பருக்கை பற்றி
வாயினால் நக்கும் மக்கள் மாண்புறல் என்றோ சொல்லீர்!

4

தாங்கொணா உணவுப் பஞ்சம் தாண்டவம் ஆடுதையா!
ஓங்கியே உடையின் பஞ்சம் உறுமுதே ஒரு புறத்தே!
பாங்குறும் பட்டினத்தில் வீடுடன் விறகுப் பஞ்சம்!
ஈங்கிவை யாவும் நீங்கி இதமுறல் என்றோ? சொல்லீர்!

## 60. இதுவா விடுதலை?

1

வெள்ளையர் ஆட்சி நீங்கி
விடுதலை யுற்றோம்; இன்னும்
கள்ளிலும் பேதா பேதக்
கருத்திலும் மீண்டோமில்லை!
கொள்ளை லா பத்தை நாடும்
கொடியவர் துன்பம் நீங்கி
உள்ளரும் உண்மையான
விடுதலை யுறும் நா ளென்றோ?

2

சாதிபே தங்க ளென்னும்
விலங்கினைத் தகர்த்தோ மில்லை!
சமயவா தங்க ளென்னும்
சச்சர வோய வில்லை!
மாதரை உயர்வா யெண்ணும்
மதி நமக் கின்னம் வல்லை!
ஏதடா, இவைக ளில்லா
விடுதலை இதமுமா மோ?

3

பணத்திமிர் படைத்த பேரின்
படாடோபம் நீங்க வில்லை!
பாட்டாளி மக்களுக்குப்
பசிதீர உணவுமில்லை!
கணத்திலே இவற்றைக் கல்லக்
கங்கணம் பூண்போம், வாரீர்!
மனத்திலே உறுதி வந்தால்
மறுகணம் மீட்சி யன்றோ?

4

படிதனில் தமிழ்த்தா யின்னும்
பழம் புகழ் பெற்ருளில்லே!
கொடுமைகள் யாவும் நீங்கி
விடுதலே கூடவில்லே!
விடுதலே என்ற பேச்சில்
மேவுமோ? மெய்ம்மை யின்பம்?
விடுதலே என்ருல் அஃது
அனேத்தினும் மீட்சி யன்ரே?

---

**குறிப்பு:**— மேற்கண்ட கவிதை, மதுவிலக்கு அமுலுக்கு வருமுன் 9—11—47உ மதுரை, தமிழ் நாடு வாரப்பதிப்பில் வெளிவந்தது.

---

## 61. முரண்பட்ட காட்சி!

### பஞ்சைகள்.

ஒட்டியுலர்ந்த வயிற்ரேடும்
உள்ளே குழிந்த கண்ணேடும்
கட்டிய கந்தைத் துணியோடும்
காட்சிய ளிப்பார் பலரிங்கே!

### பணக்காரர்கள்

ஓரடி உப்பிய வயிற்ரேடும்
ஒளிமிகும் அழகிய கண்ணேடும்
சீரடி தன்னிற் செருப்போடும்
தெரிசனந் தருவார் சிலரங்கே!

### பஞ்சைகள்

கூழும் குடிக்க வழியின்றி
குந்திடக் கூரை தானின்றி
நாளும் எலும்புந் தோலாக
நலியும் மக்கள் பலரிங்கே!

**பணக்காரர்கள்**

பாலும் பழமும் மிகவுண்டு
பளிங்கு மாளிகை தனில்வாழ்ந்து
நாளும் உடலம் மிகப்பருத்து
நன்ருய் வாழ்வார் சிலரங்கே!

**பஞ்சைகள்**

நெற்றி வேர்வை நிலத்தில்விழ
நிதமும் பாடு பட்டுடலம்
வற்றி வரண்டு மனமிடிந்தே
வருந்தும் மக்கள் பலரிங்கே!

**பணக்காரர்கள்**

ஒருதுளி வேர்வை சிந்தாமல்
உடம்பை வருத்திக் கொள்ளாமல்
இருந்த இடம்விட் டகலாமல்
இன்பாய் வாழ்வார் சிலரங்கே!

---

## 62. ஊர் அரசு!

1

வாழ்க்கையின் தேவை வசதிகள் எய்தி
வாழும் வகையை வாகுடன் ஆய்ந்து
கீழ்மைய கற்றி மேனிலை பற்றி
கிராமந் தோறும் அரசினை அமைப்போம்!

2

ஊர்ஒவ் வொன்றும் ஒவ்வோர் அரசாய்
சீருடன் அமைக்கத் தினம்பணி செய்வோம்!
யார்எது சொலினும் எமக்கென்? என்று
காரிய மதனில் கண்ணு யிருப்போம்!

3

உழவுத் தொழிலின் உயர்வினை மறந்தோம்!
ஊதியந் துறந்தோம்; வாதையில் உழன்றோம்!
அழிவுக் கிடமாம் அடிமையில் ஆழ்ந்தோம்!
அந்தோ, அமைதி அற்றிவண் வாழ்ந்தோம்!

4

சொந்தத் தொழிலே சுயமதிப் பாகும்!
எந்தத் தொழில்தான் இதற்கீடாகும்?
நிந்தையி லாமல் நிதமினி வாழ்வோம்!
பந்தமி லாமல் பாரினை ஆள்வோம்!

5

யாவரும் வேலை செய்தினி உண்போம்!
யாவரும் கல்வி எய்திஇன் புறுவோம்!
யாவரும் சமமே; எம்முடை அரசில்
யாவரும் மன்னர், ஏழையரேது?

---

## 63. பொங்கலும் வந்ததடி!

இராகம்; வராளி] [தாளம்: சாப்பு

**பல்லவி**

பொங்கலும் வந்ததடி — சங்கராந்திப்
பொங்கலும் வந்ததடி!

**அநுபல்லவி**

மங்களம் எங்கணும் தங்கியி லங்க
மகர தோரணம் நகரில் விளங்கப் (பொங்

சரணங்கள்

செங்கரும் பும்நெல்லும் செழிப்புற் றோங்க
தீங்கனி காய்வகை காய்த்துக் குலுங்க
மங்கள வாத்தியம் எங்கும் முழங்க
மாதர்கள் குங்குமம் வாரி வழங்கப் (பொங்

தானியம் ஒன்பதும் தம்மனே சேர்த்து
தமரும் விருந்தும் உண்டுசு கித்து
நானில மீதினில் இன்ப மிகுத்து
நாட்டியம் கூத்துகள் கண்டு களித்திடப் (பொங்

மாட்டையும் கன்றையும் மஞ்சள்நீ ராட்டி
வண்ணமி கும்மலர் மாலைகள் சூட்டி
வேட்டி துணியதன் மேனியில் பூட்டி
வேடிக்கை யாகவே மஞ்சு விரட்டிடப் (பொங்

---

## 64. எங்கும் இன்பம்

எங்கெங்கு நோக்கினும் இன்பமடா!—உனக்(கு)
கிவ்வுல கில்துன்பம் இல்லையடா!
இங்குனக் கெல்லையில் லாநலம் நல்கிய
இறைவனை ஏத்துதல் இன்பமடா!

சந்திர சூரியர் இன்பமடா!—கொஞ்சித்
தழுவும் குழந்தைகள் இன்பமடா!
அந்தரத் தேநின்று கண்ணைச் சிமிட்டிடும்
அற்புத விண்மீன்கள் இன்பமடா!

பொங்குங் கடல்உனக் கின்பமடா!—வையப்
பொருள்கள் அனைத்தினும் இன்பமடா!
சங்கத் தமிழ்உனக் கின்பமடா!—உயிர்த்
தையலர் ஒண்முகம் இன்பமடா!

ஏழைக் கிரங்குதல் இன்பமடா!—என்றும்
இதமொழி கூறுதல் இன்பமடா!
வாழும் வகைதெரிந் தேநடந்தா லுந்தன்
வாழ்வு முழுவதும் இன்பமடா!

அன்பும் அறனும் கடைப்பிடித்தே—இந்த
அவனியில் வாழுதல் இன்பமடா!
என்பும் பிறர்க்குப் பயன்படு மேயெனில்
எல்லை யில்லாப்பெரும் இன்பமடா;

---

## 65. பாக்கியவான்கள் யார்?

இயேசுவின் மலைப்பிர சங்கம் கேட்டோர்
மாசுகள் நீங்கி மாண்பினை அடைவார்
என்பதில் ஐயம் ஏதும் உண்டோ?
பாக்கியவான்கள் யார்? எனுந் தலைப்பில்
இயேசு நிகழ்த்திய தேசுரை தன்னைக்
கீழே காண்போம், சூழ வாரீர்!

பாக்கிய வான்கள் யாரெனப் பகர்வேன்;—
ஆவியில் தரித்திரர், அல்லல் படுவோர்,
சாந்தகு ணுளர், சமரசம் செய்வோர்,
இரக்க முள்ளோர், இருதய சுத்தர்,
நீதியி னிமித்தம் வாதனை யுறுவோர்
இவரே என்றும் பாக்கியவான்கள்!

இதந்தரும் பூமியை இவர்சுதந் தரிப்பார்!
பரம திருப்தியைப் பாரினி லுறுவார்!
இறைவன் தரிசனம் இனிதே எய்துவார்!
இறைவன் புதல்வர் இவரே யாதலின்
என்றும் அவனது இன்னருள் தன்னால்
தேற்றப் பெறுவார் இவரெனல் திண்ணம்!
''பரலோக ராஜ்யம்'' இவருடைத் தாமே!

---

## 66. இன்பக் குறள்

இராகம்: கர்நாடக தேவகாந்தாரி] [தாளம்: ஆதி

பல்லவி

தமிழ் மறையாம் இன்பக் குறள் போலவே—இந்தத்
தாரணி மேல் வேருேர் நூல் இல்லையே! (தமிழ்

அநுபல்லவி

அமிழ்தினும் இனித்திடும் சொல்லழகும்—பொருள்
ஆழமும் நிறைந்திடும் நல்லமைப்பும் கொண்ட (தமிழ்

சரணம்

சாதிக் கொரு நீதி சமயத்துக் கொரு நீதி
சாற்றிடா உலகப் பெரும் பொது நூலாம்!
ஓதி யுணர்ந்திட உவந்து முன் வாரீரே!
உலகில் இணையின்றி உயர்ந்து விளங்கிடவே! (தமிழ்

---

## 67. நேதாஜி நாமம் நிலவுக!

(வாழ்க திலகன் நாமம்—என்ற பாரதியாரின் இசை)

பல்லவி

என்றும் நேதாஜிநாமம் நின்று நிலவுக!
எங்க ளின்னல் நீங்கிஇன்பம் என்றும் உலவுக!

சரணங்கள்

இந்திய தேசியப்படை தன்னை நிறுவினுன்!
ஈடில் ஆஜாத் ஹிந்த் சர்க்காரை ஏற்படுத்திஞன்!
இந்தியாவின் முடிசூடாத மன்னன் இவனன்ருே?
எந்த நாளும் இவன்பெருமை இலகுமே யன்ருே?

தாயின் அடிமைத்தளையைத் தகர்க்கத் தன்னலம் வென்ருன்!
தனது நாட்டுக் காகரத்தம் தாருங்கள் என்ருன்!
ஆயிழையார் தங்கள் கரத்தில் ஆயுதம் தந்தான்!
அதன் பயனுய் "ஜான்ஸிராணி படை" கண்டு சிறந்தான்!

ஜெய்ஹிந்த் என்னும் மந்திரத்தின் சீர்வலி கொண்டே
டில்லி நோக்கிச் செல்லுவோமே, சேர்ந்து நாமின்றே!
உய்தலின்றி வாழ்வதாலிங் கொரு பயனுண்டோ?
உண்மையான விடுதலையுறத் தடையுண்டோ?

---

## 68. ஜெய்ஹிந்த்!

ஜெயக்கொடி யுயர்த்தவே ஜெனித்த மந்த்ரம் ஜெய்ஹிந்த்!
தேசமீட்சி காணுதற்குச் செப்பும் மந்த்ரம் ஜெய்ஹிந்த்!
பயத்தை நீக்கவேமிகப் பவித்ர மந்த்ரம் ஜெய்ஹிந்த்!
பாரதத் தலைவன்காந்தி பகரும் மந்த்ரம் ஜெய்ஹிந்த்!

வீரனும் நேதாஜிவிண்ட மேன்மை மந்த்ரம் ஜெய்ஹிந்த்!
மெச்சிநேரு உச்சரிக்கும் இச்சை மந்த்ரம் ஜெய்ஹிந்த்!
மேருநின்று குமரியீறு கூறும் மந்த்ரம் ஜெய்ஹிந்த்!
வெள்ளைமக்க ளும்விரும்பி விள்ளும் மந்த்ரம் ஜெய்ஹிந்த்!

சாதிசமயப் பூசலைத் தகர்க்கும் மந்த்ரம் ஜெய்ஹிந்த்!
தட்டிமக்க ளைச்சமர்க்கெ ழுப்பும் மந்த்ரம் ஜெய்ஹிந்த்!
ஏதமற்ற இந்தியாவின் கீத மந்த்ரம் ஜெய்ஹிந்த்!
இட்டசித்தி யுற்றிடச்செ லுத்தும் மந்த்ரம் ஜெய்ஹிந்த்!

விண்ணிடியைப் போலவே விளம்பும் மந்த்ரம் ஜெய்ஹிந்த்!
வெற்றிபெற்றி டச்சிறந்த வீர மந்த்ரம் ஜெய்ஹிந்த்!
மண்மிசைச் சுயாட்சியை வழங்கும் மந்த்ரம் ஜெய்ஹிந்த்!
வாருங்கள், எல்லோரும் சேர்ந்து கூறுவோமே,
ஜெய்ஹிந்த்!

---

## 69. பிரார்த்தனை (36-ம் பாடல்)

உலகம் பரவும் உயர்பரம் பொருளே!
எளியேன் செய்யும் பிரார்த்தனை யிஃதே!
எந்தன் இதயத் தெழுந்திடர் செய்யும்
வறுமை நோயை மாய்ப்பா யாக!
இன்ப துன்பை எளிதில் தாங்கும்
சக்தியை எனக்குத் தருவா யாக!
சேவையை மகிழ்ந்து செயவும், அன்பின்
ஆற்றலும் இன்னே அடியேற்(கு) ஈவாய்!
தீனருக் குதவும் திறனை நல்குக!
ஆணவம் என்னும் அரக்கன் எந்தன்
அகத்தை நாடா(து) அப்பா லகற்றுக!
சிறுமைகள் என்பால் சேரா தொழிப்பாய்!
மனமெழும் எண்ணம் மாண்புடைத் தாகவும்
திருவுளக் குறிப்பைச் செவ்வனே தேர்ந்து
என்வலி யாவும் இறையுன்
அடிக்கே அற்பணம் ஆக்கவும் அருள்வாய்!

---

## 70. இறைவன் தொடர்பு (80-ம் பாடல்)

என்றும் இனிதே நின்று விளங்கும்
சுடரா கியநற் சூரியனே, நான்
இலையுதிர் காலம் நிலையில் லாமல்
விசும்பின் மீது வீணு யலையும்
சிறியவோர் மேகத் திரள்தனைப் போன்று
உள்ளேன் என்பதை உணர்வாய் நீயே!

உன்பரி சத்தால் என்னிட முள்ள
ஈரம் நீங்கிற் றிலேயே, உனது
ஒளியுடன் யானும் ஒருமித் தேனிலை!
உன்னைப் பிரிந்து உலகினில் யானும்
கழிக்கும் மாத, வருடங்களையான்
இவ்வித மாக எண்ணுகின் றேனே!

இங்ஙனம் யானும் இருப்பதுன் விருப்பும்
விளையாட்டும் என்றால் வேறென் சொல்வேன்!
என்பா லுள்ள நிலையில் லாத
ஒன்றுமில் லாமையை நன்றுநீ எடுத்து
நிறங்களா லதனை அலங்கரித் திடுவாய்!
பொன்னு லதனைப் பூசிய பின்னர்
எண்ணிய வண்ணம் எங்கும் திரியும்
காற்றில் அதனை மிதக்கச் செய்து
பலவகை வியப்புடன் விரிப்பா யாக!

இரவு நேரம் இவ்விளை யாட்டை
நிறுத்துதற்(கு) உனக்கு விருப்பம் வருங்கால்
இருளில்நான் இளகி இல்லா தகல்வேன்!
இலையேல்,
வெள்ளிய காலை வேளைபுன் முறுவலில்
தெள்ளிய குளிர்ந்த தூய்மையில் மறைவேன்!

---

## 71. காலமும் கடவுளும் (82-ம் பாடல்)

ஐயனே, உந்தன் கரத்துள் எமைந்த
காலத் துக்கோர் கணக்கே யில்லை!
உன்நிமி டங்களை ஓர்கணக் கிட்டு
எண்ணுந் திறத்தார் எவரு மில்லை!
இரவும் பகலும் விரைவில் ஏகும்!
மலர்களைப் போன்று மலர்ந்து வாடி
மறைந்தே செல்லும் பலகா லங்கள்!
காத்திங் கிருக்கும் வழியைக் காண
உன்னை யல்லால் வேறெவர் உள்ளார்?

வனத்தில் மலரும் ஒருசிறு மலரை
நிறைவுற வமைக்கும் நிகரறு பணியில்
பன்னூற் ருண்டுகள் பலியா கும்மே!

இழந்திட எமக்கு நேர மில்லை!
எனவே, இங்கு வருந்தரு ணத்தைப்
பயன்படுத் திடவே பாரில் விரைந்து
முந்திக் கொள்ள முயல்கின் றேமே!

நேரங் கடந்து நிதானித் தொன்றைச்
செய்யத் தக்க செல்வர்யா மில்லை!
என்னிடம் வந்து எதையோ பிதற்றும்
மனிதர்க ளுடனே வார்த்தையா டுவதில்
காலம் வீணாய்க் கழிகின் றதுவே!
உன்னுயர் பீடம் இறுதி வரையில்
பூசைக் குரிய பொருட்க ளின்றி
வறிதே யிருக்க வாய்ப்பா கும்மே!

பகல்போது முடியும் போதுன் கதவுகள்
மூடப் பெற்றுப் போகுமென் றுணர்ந்து
ஓடோடியும் நான் உன்பால் வருகிறேன்!
ஆயின், இன்னும் அதிக நேரம்
உளதென யானும் உணர்கின் றேனே!

---

## 72. முத்தாரம் (83-ம் பாடல்)

அன்னாய்! அகில காரணீ! உந்தன்
கந்தரத் திற்கோர் சுந்தர மான
முத்தா ரத்தைத் தொடுக்க முனைந்தேன்!
என்பால் பெருகும் இருவிழி நீரால்
அழகுறும் நின்தாள் அணிசெய் விக்க
நட்சத் திரங்கள் நாட்டங் கொண்டு
ஒளிமிகும் கொலுசுகள் உண்டாக் கினவே!

ஆயினு மெந்தன் அழகிய ஆரம்
நின்மார் பகத்தே நிலைத்து மின்னும்
என்பதில் ஐயம் ஏதும் இல்லை!
செல்வமும் புகழும் சீரும் சிறப்பும்
அளிப்பதும் மறுப்பதும் அன்னைநின் உரிமை!
எளியேன் எந்தன் இதயச் சோகம்
ஒன்றே எனது உடைமை யாகும்!
நானிதை யுனக்குக் காணிக்கை யாக
உதவ வருங்கால், உத்தமீ! நீயுன்
அருளைப் பரிசாய் அளித்தாட் கொள்வாய்!

# பிழை திருத்தம்

| பக்கம் | பாடல் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 45 | 35 | 6 | கனைகளைப் | களைகளைப் |
| 55 | 44 | 2 | அரிஞரேறே! | அறிஞரேறே! |
| 56 | 45 | 12 | மகிழ்வ தென்னாளோ? | மகிழ்வ தெந்நாளோ? |
| 70 | 59 | 1 | உவுணமில்லை | உணவுமில்லை |
| 75 | 64 | 2 | கிவ்வுலகில் | இவ்வுலகில் |

காமராசர் பல்கலை
அவ்வை
க. சண்முகம் நூலகம்